பக்கங்கள்: 21

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை 16.10.2022 கதிர் 343

இது ரகசியம் அல்ல!

'சும்மா இருந்த சங்கை ஊதி கெடுத்தானாம் ஆண்டி' என்பார்கள்.

யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணனின் வேலையும் அப்படித்தான் என்றாகி இருக்கின்றது.

அவரின்

2

# தமிழினத்தின் தலைவிதியை தமிழர்களே தீர்மானிப்பார்கள்

## இதைச் சிங்களவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஆணித்தரமாக வலியுறுத்தினார் வேலன் சுவாமிகள்



உண்மையாகவே சிங்கள தேசம் அமைதியை இந்தத் தீவில் விரும்பினால், முதலில் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்பதையும், தமிழர் ஒரு தேசிய இனம் என்பதையும் ஏற்றுக்கொள்ளுங்கள். இதன்வழி தமிழருக்குத் தமது தலைவிதியை தீர்மானிக்கும் சுயநிர்ணயம் உள்ளது என்பதையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

- இவ்வாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளரும் சிவகுரு ஆதீன முதல்வருமான தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

19

## காணாமல் போனோர் பற்றிய மட்டு. விசாரணை ஆர்ப்பாட்டப் போராட்டத்தால் கைவிடப்பட்டது






(பழுவூரான்)

காணாமல்போனோர் அலுவலகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் வலிந்துகாணாமலாக்கப்பட்டோர் செய்த ஆர்ப்பாட்டம் காரணமாக நேற்று இடைநிறுத்தப்பட்டன.

2

## மாங்குளத்தில் 2 யானைகள் ரயிலுடன் மோதுண்டு சாவு!



ரயிலுடன் மோதுண்டு இரண்டு யானைகள் பலியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30

19

## தொடரும் சீரற்ற காலநிலை மூவர் மரணம்; இருவர் மாயம்

### 55 ஆயிரத்து 435 பேர் பாதிப்பு

இலங்கையில் 11 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 13 ஆயிரத்து 902 குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 435 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

19

## கொடிகாமத்தில் ரயிலுடன் மோதி வயோதிபர் சாவு

கொடிகாமம் பகுதியில் உள்ள ரயில் பாதையைக் கடக்க முற்பட்ட வயோதிபர் ஒருவர் ரயில் மோதியதில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

20

## கட்சி அரசியலைப் புறந்தள்ளி சகலரும் ஒன்றிணையுங்கள்!

### அம்பாறையில் ரணில் வலியுறுத்து



சம்பிரதாய கட்சி அரசியலைப் புறந்தள்ளி, உணவுப் பாதுகாப்பை உருவாக்குவதன் மூலம் மக்களின் உணவுப்பிரச்சினையைத் தீர்க்கும் வேலைத்திட்டத்தில்அனைவரும்இணைந்து செயற்பட வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கிராமிய பொருளாதார மையங்களை வலுவூட்டும்

20

## மழையால் மூவர் மரணம் 55 ஆயிரம் பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற வானிலை காரணமாக 11 மாவட்டங்களில் 13,902 குடும்பங்களைச் சேர்ந்த 55,435 பேர்

19

## 1,000 போதை மாத்திரைகளுடன் நால்வர் யாழ். நகரத்தில் கைது!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாண நகரின் வைத்தியசாலை வீதியில் உள்ள மூன்று புடவைக் கடைகளில்

19

## வேப்பங்குளத்தில் புதிய மின்கம்பம் முறிந்து விழுந்தது



வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட உயர் அழுத்த மின் கம்பம் உடைந்து விழுந்த நிலையில், மின்கம்பத்தில் ஏறி நின்று வேலை செய்த ஊழியர் மயிரிழையில் உயிர்

19

## மிக மோசமான ஆட்சியாளர்களால் கையேந்தும் நிலையில் இலங்கை

### வவுனியா நிகழ்வில் ரிஷாத் குற்றச்சாட்டு



கல்வியில் கூட தென்னாசியாவில் உயர்ந்த நிலையில் இருந்த எமது நாட்டை மிகவும் மோசமான ஆட்சியாளர் கள் துர்ப்பாக்கிய நிலைக்கும், கையேந்து கின்ற நிலைக்கும் கொண்டு வந்து விட் டார்கள்.

- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று

20

## வவுனியாவில் பஸ் மோதி வயோதிபர் பரிதாபச் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் சைக்கிளுடன் இ.போ.ச. பஸ்மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் நேற்று மாலை 5.40 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில்மேலும்தெரியவருவதாவது,

19

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதேச்சாதிகார நடவடிக்கையை ஆட்சேபித்து, யாழ் மாநகர சபையின் உறுப்பினர்கள் கடந்த மாத சபை அமர்வின் போது வெளிநடப்புச் செய்தனர். அதனால் கோரமின்றி சபை நடவடிக்கைகள் செயலிழந்தன. சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

ஜனநாயக மரபுகளின்படி, தமது எதிர்ப்பைக் காட்டுவதற்குத் தரப்புகள் வெளிநடப்புச் செய்வது வழமை. அதற்காக சபை உறுப்பினர்களின் மாத வேதனத்தை தடுக்க முடியாது. அப்படித் தடுப்பது கூட, எதேச்சாதிகார நடவடிக்கைதான்.

அந்த எதேச்சாதிகாரத்தையே தனது நிர்வாகப் பண்பியல்பாகக் கொண்டிருக்கும் யாழ் முதல்வர், தமது சபை உறுப்பினர்களின் செப்டம்பர் மாதக் கொடுப்பனவை இதற்காக நிறுத்த நடவடிக்கை எடுத்தார்.

மேயரின் இந்த நடவடிக்கையை அடுத்து மாநகர சபையின் உறுப்பினர்களில் ஒரு குழுவினர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மேயருக்கு எதிராக முறைப்பாடு செய்தனர். அதே சமயம் உள்ளூராட்சி ஆணையாளரிடமும் புகார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் உடனடியாகப் பதிலளிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ் மாநகர சபையைப் பணித்துள்ளது. முதல்வர் என்ன பதில் அனுப்பப் போகிறாரோ தெரியவில்லை.

அதேசமயம் அந்த கொடுப்பனவுகளைத் தாமதமின்றி உடன் வழங்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எழுத்தில் மாநகர சபையைப் பணித்திருக்கின்றார். இந்த உத்தரவு தொடர்பிலும் முதல்வர் என்ன செய்வார் என்றும் தெரியவில்லை.

தாம் எதேச்சாதிகாரமாக மறித்த வேதன வழங்கல் தடுப்பு உத்தரவை விலக்கி மேலிடத்து உத்தரவை சிரமேற்கொண்டு நடவடிக்கை எடுப்பாரா? அல்லது தொடர்ந்து முரண்டு பிடித்துக் குழப்பத்தைத் தொடர்வாரா? தெரியவில்லை.

எது, எப்படி என்றாலும், 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்ற பழமொழி நம் மத்தியில் இருப்பதை மறந்து விடக்கூடாது.

சில சமயங்களில் மேலிடத்து உத்தரவு, மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை என்பவற்றை தவிர்ப்பதற்காக தந்திரோபாய அரசியல் காய் நகர்த்தலாக, விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற மாதிரியான நடவடிக்கையை அவர் எடுக்கக் கூடும்.

கோரமின்றியோ அல்லது வேறு காரணத்திற்காகவோ ஒரு மாநகர சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டால் அடுத்த 14 நாள்களுக்குள் அந்த ஒத்தி வைக்கப்பட்ட கூட்டத்தை முடிவுறுத்துவதற்கான தொடர் கூட்டத்தை சபை முதல்வர் கூட்ட வேண்டும். இதுதான் ஒழுங்கு விதி.

ஆனால் கடந்த 27ஆம் திகதி உறுப்பினர்களின் வெளிநடப்பால் ஒத்திவைக்கப்பட்ட செப்டம்பர் மாதத்துக்கான கூட்டத்தை நடத்தி முடிப்பதற்காக நாளை திங்கட்கிழமை 17ஆம் திகதி காலையில் ஒரு கூட்டத்தையும், அதே தினத்தில் இந்த அக்டோபர் மாதத்திற்கான சபையின் கூட்டத்தை மாலையிலும் அவர் ஏற்பாடு செய்திருக்கின்றார்.

ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தை 20 நாள்களின் பின்னர் மேயர் கூட்டுவது சட்டப்படி சரியானதா என்ற கேள்வியும் எழுகிறது.

அது ஒரு புறம் என்றால், நாளைய கூட்டத்திற்கு சபை உறுப்பினர்கள் வருகின்றமையால் அவர்களின் செப்டம்பர் மாத கொடுப்பனவை வழங்கச் சம்மதித்தேன் என விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையை அவர் அவிழ்த்து விடக் கூடும்.

தமது வேதனத்தை மறித்த குற்றத்துக்கும் சேர்த்து மேயர் மன்னிப்புக் கேட்காவிட்டால், தொடர்ந்து சபை அமர்வுகளைப் பகிஷ்கரிப்பது என்ற நிலைப்பாட்டை உறுப்பினர்கள் சேர்ந்து முன்னெடுத்தால் மேயர்பாடு நெருக்கடிதான். விவகாரம் பெருஞ் சிக்கலாகிவிடும்.

இந்தச் சபையின் ஆட்சி காலம் கூடிப் போனால் இன்னும் ஐந்து மாதம்தான். அதற்குள் ஒரு குழப்பம் பார்த்துதான் மேயர் அடங்குவார் போல...!

**- மின்னல் -**

## காணாமல் போனோர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள் மட்டக்களப்பு காணாமல் போனோரின் உறவினர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கின்றனர். அவர்களுக்கான இழப்பீடுகளை வழங்கும் பணிகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இதன்கீழ் நேற்றைய தினம் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் விசாரணையை நிறுத்தும் முகமாகவும், எதிர்ப்பினை வெளிப்படுத்தும் முகமாக வும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட் டில் நேற்றைய தினம் பாரிய எதிர்ப்புப் பேரணியும் பிரதேச செயலக முற்றுகைப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டன.


வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் அம்பாறை மாவட்டத் தலைவியும், கிழக்கு மாகாண இணைப்பாளருமான தம்பிராசா செல்வராணி தலைமையில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு தேர்தல் அலுவலகத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், பிரதேச செயலக பிரதான வாயில் வரை சென்று அங்கு முற்றுகைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.ரீநேசன், பிரதி முதல்வர் சத்தியசீலன், முன்னாள் கிழக்குமாகாணசபை உறுப்பினர் இ.பிரசன்னா, பொது அமைப்புக்களின் இணைப்பாளர் சீலன், இலங்கை தமிழரசு கட்சி மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் கலைவாணி, வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவாட்ட பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்களை ஏமாற்றும் ஜனாதிபதி செயலகத்தின் விசாரணை வேண்டாம், எங்கள் உறவுகளின் உயிருக்கு இரண்டு லட்சம் ரூபா இலஞ்சமா? ஆணைக்குழு விசாரணையை உடன் நிறுத்து, ஓ.எம்.பி. வேண்டாம், சர்வதேசத்தை ஏமாற்றும் அரசின் செயற்பாடுகளை உடன் நிறுத்து, பொருளாதார

(2ஆம் பக்கம் பார்க்க




**மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகள் 17.10.2022 ஆரம்பமாகின்றன.**

**Civil Draftsperson (NVQ level 4) course – 1 year**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
**Course leads to:**
» Follow course in NVQ level 5
»Register for drawings at local councils

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*
» Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
»Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw
» Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
»AutoCAD 2D & 3D Modeling
»Java, C++ Programming
» Accounting Package Tally

**Our Civil Draftmanship & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too**

**Certificate in Craft Courses** (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)
» அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும் -Aluminum Fabrication

**மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.**
**(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Sports**

For More Information : DIRECTOR
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.**
**Tel :0212223382/0212250975 E-mail: ejcit@sltnet.lk**



Search Facebook
V2 Travels and Tours

V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

0768226244
0768226240

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணில் புரியாத புதிர்

'உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்துக்கோ இரண்டு பக்கமும் அடி' என்பார்கள்.

ஆனால் நமது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வுக்குத் திரும்பிய பக்கம் எல்லாம் அரசியல் தாக்குதல்தான். ஆனால் மனிதர் அசருபவராகத் தெரியவில்லை.

அவருடைய அரசியல் நிலைப்பாடு தொடர்பில் பிற அரசியல் தலைவர்கள் கூறுகின்றமையைப் பார்த்தால் ஒவ் வொருவரும் ஒவ்வொரு ரகத்தில், ஒன்றுக்கொன்று முரணாக விமர்சனக் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

அவற்றை உற்று நோக்கினால் கண் தெரியாத குருடர்கள் யானையைத் தொட்டுப் பார்த்து அது பற்றி விவரித்த கதையே நினைவுக்கு வருகின்றது.

பலரும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மோசமாக விமர்சிக்கின்றனர். ஆனால் அந்த விமர்சனங்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றமை தான் வியப்புக்குரியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.எ. சுமந்திரன் உட்பட எதிரணி அரசியல் கட்சியினர் பலரும் 'ரணில் ராஜபக்ஷ' என்று உச்சரிக்கின்றமையை அவதானிக்க முடியும்.

ரணிலுக்கு இந்த ஜனாதிபதி பதவி ராஜபக்ஷக்கள் தாராள மனத்துடன் போட்ட பிச்சை. அதனால் ராஜபக்ஷக்களின் நலன்களையே முன்னிறுத்தி ரணில் விக்கிரமசிங்க செயல்படுகின்றார். ஆகவே அவரை 'ரணில் ராஜபக்ஷவாகவே' மக்கள் பார்க்கின்றனர் என்று பிரதான எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன.

ஆனால் இப்போது ரணிலின் பக்கமும் இல்லாமல், ராஜபக்ஷக்களின் பக்கமும் இல்லாமல், மூன்றாம் பக்கத்தில் நிற்கும் வாசுதேவ நாணயக்காரவோ வேறு விதமாகக் கூறுகின்றார். ராஜபக்ஷக்களின் மீதான மக்களின் வெறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்ட வகையில் தீவிரப்படுத்தி வருகின்றார், பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷக்கள்தான் காரணம் என்பதைக் காட்டி, அதனூடாக அரசியல் லாபம் தேட முயற்சிக்கின்றார், அதன் ஒரு பகுதியாக பொதுஜன பெரமுனவைப் பலவீனப்படுத்தி, ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் பலப்படுத்த முயற்சிக்கின்றார் என்று கூறுகிறார்.

ஆனால் ராஜபக்ஷகளில் சீனியரான மஹிந்த ராஜபக்ஷவோ நாடாளுமன்றில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றிக்கு சத்தம் சந்தடியின்றி முழு ஆதரவையும் பெற்றுக் கொடுத்துவிட்டு, இப்போது ரணிலைப் புகழ்ந்துரைக்கின்றார்.

கடந்த ஞாயிறன்று பொதுமக்கள் மத்தியில் உரையாற்றிய மஹிந்த ராஜபக்ஷ, ஒரு காலத்தில் ரணிலை அரசியல் ரீதியாக திட்டினோம், இப்போது அவர் திருந்தி விட்டார், அதனால் அவருக்கே எமது முழு ஆதரவு உண்டு என்று ரணில் புராணம் பாடுகிறார்.

தமிழ் கட்சிகள் கூட – குறிப்பாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூட – ஜனாதிபதித் தேர்தலில் இருந்து எல்லாவற்றிலும் ரணிலை எதிர்ப்பதாக வெளியில் காட்டுகின்றது. ஆனால் செயலில் எப்படி நடக்கின்றது என்பதை தமிழ் மக்கள் அறிவர்.

அந்த வகையில் பார்த்தால் ரணில் இலங்கை அரசியலில் ஒரு புரியாத புதிர்தான். அதுதான் அவரது நரித்தந்திர அரசியல் சாணக்கியத்தின் பிரதிபலிபோ தெரியவில்லை.

## வடக்கில் கடலட்டைப் பண்ணைகளுக்கு பங்களிக்க இந்திய முதலீட்டாளர் ஆர்வம்!




இந்திய தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் கடலட்டைப் பண்ணைகளுக்குத் தேவையான கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையங்களை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மன்னார், ஒலைத்தொடுவாயில் அமைந்துள்ள நக்டா நிறுவனத்தால் செயற்படுத்தப்படுகின்ற கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்தில் நடைபெற்றது.

வடக்கில் அமைக்கப்பட்டு வருகின்ற கடலட்டைப் பண்ணைகளுக்கான கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மற்றும் கலட்டை குஞ்சு பாரமரிக்கும் நிலையங்களை நவீன முறையில் அமைப்பதற்கான முதலீடுகளை மேற்கொள்ளவதற்கு இந்திய தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்திருந்தனர்.

இந்நிலையில், நக்டா நிறுவனத்தின் முகாமைத்துவத்தில் செயற்படுத்தப்படுகின்ற, ஓலைத்தொடுவாய் கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்திற்துக்கும் இந்திய முதலீட்டாளர்களின் தொழில்நுட்பங்களை உள்வாங்கி, அதன் உற்பத்தி திறனை அதிகரிக்க விரும்பிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முதலீட்டாளர்களை ஓலைத்தொடுவாய் குஞ்சு கருத்தரிப்பு நிலையத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில், கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையம் மற்றும் குஞ்சு பராமரிக்கும் நிலையம் போன்றவற்றுக்கான இந்திய தனியார் முதலீட்டாளர்களின் அனுபவத்தினையும் நவீன தொழில்நுட்பத்தினையும் பயன்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கடற்றொழில் சார் மக்களுக்கு நிலையான பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்கும் நோக்கில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில், பிரதேச மக்களினால் உருவாக்கப்பட்டு வருகின்ற கடலட்டைப் பண்ணைகளுக்கான கடலட்டை குஞ்சுகளின் தேவை அதிகரித்துள்ள நிலையில், இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

அதேவேளை மன்னாரில் கோந்தைப் பிட்டி எனும் இடத்தில் உள்ள இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணிகளைப் பயன்படுத்துவதற்கு இரண்டு சமூகங்கள் ஆர்வம் செலுத்தி வருகின்ற நிலையில், மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்களின் பங்குபற்றலுடன் விரிவான கலந்துரையாடலை நடத்தி, நிரந்தரமான தீர்வை சுமுகமாக அமுல்படுத்துவதற்கு, சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டுக்கு வரம்புமீறி தங்க நகைகளை அணிந்து வருபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 16

இலங்கைக்கு வரம்புமீறி தங்க நகைகளை அணிந்து வருபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கபடும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கடத்தல் நோக்கத்துடன், வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வரம்பு மீறி தங்க நகைகளை அணிந்து வருபவர்களுக்கு எதிராகவே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

நாட்டுக்கு தங்கம் கடத்தப்படுவதால் மாதம் ஒன்றுக்கு சுமார் 3 கோடி அமெரிக்க டொலர்கள் வரி வருமான இழப்பு ஏற்படுகின்றது.

இந்தக் கடத்தல்காரர்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக தேவையான சட்ட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும். ஆனால், சாதாரண பயணிகளுக்கு இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. – என கூறினார்.

## போதைப்பொருள் பாவனைக்கு எதிராக சகல கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்!

### சிவாஜிலிங்கம் வலியுறுத்து

அனைத்து கட்சிகளும் எவ்வித பேதமின்றி இணைந்து போதைப்பொருள் பாவனைக்கு எதிராக செயற்பட வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

'போதைவஸ்து பாவனை மற்றும் திருட்டு சம்பவங்கள் என்பன தற்போது அதிகரித்து காணப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த அனைத்து கட்சிகளும் எவ்வித பேதமின்றி இணைந்து போதைப்பொருள் பாவனைக்கு எதிராகச் செயற்பட வேண்டும். விழிப்புக்குழுக்களை உருவாக்கி செயற்பட வேண்டும்.

பொலிஸ் மற்றும் படையினர் அதிகமாக



இருந்தும் போதைப்பொருள் பாவனையை தடுக்க முடியாதுள்ளது. எங்களைச் சீரழிக்க சிங்கள பேரினவாதம் முயற்சிக்கிறது. இதனை அனைவரும் இணைந்து முறியடிக்க வேண்டும்.

எங்களை சீனா பகடைக்காயாக்க முயற்சிக்க வேண்டாம். குழம்பிய குட்டையில் சீனா மீன்பிடிக்ககூடாது. சீனத் தூதரகத்திடம் பெற்ற உதவி தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தரின் கருத்து வேடிக்கையானது எனக் கூறினார்.

# மனிதாபிமான தேவைகளை விரைவாக பூர்த்தி செய்யாவிட்டால் இலங்கையர்களுக்கு பாதிப்பு!

## நெஞ்சிலுவை செம்பிறை சமூக ஆசிய பசுபிக்கிற்கான பிராந்திய இயக்குநர் ஆலோசனை

கொழும்பு, ஒக். 16

மனிதாபிமான தேவைகளை திறமையாகவும் விரைவாகவும் பூர்த்திசெய்யாவிட்டால் இப்போது நெருக்கடியான நிலையில் உள்ள மக்கள் தப்பமுடியாத அவல நிலைக்குச் செல்வார்கள் என சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சமூகத்தின் ஆசிய பசுபிக்கிற்கான பிராந்திய இயக்குநர் அலெக்ஸாண்டர் மத்யூ எச்சரித்துள்ளார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கம் மற்றும் இராஜதந்திர சமூகத்தினரைச் சந்திப்பதற்காக மேற்கொண்ட விஜயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

'இலங்கையின் நலிவடைந்த நிலையில் உள்ள மக்கள் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பெருமளவு கடன்வாங்குதல், குறைந்தளவு உணவை உண்ணுதல், நாளாந்த உணவை குறைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சமூகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கைகள் ஏற்கனவே வறுமைக்கோட்டின் கீழ் உள்ள இலங்கையின் நலிவடைந்த மக்கள் எவ்வாறு விரக்தி நிலையை நோக்கித் தள்ளப்படுகின்றனர் என்பதை நேரடியாகத் தெரிவிக்கும் விதத்தில் காணப்படுகின்றது.

ஏற்கனவே வறுமைக்கோட்டின் கீழ் உள்ள இலங்கையின் நலிவடைந்த மக்கள் பெருமளவு கடன்வாங்குதல் குறைந்தளவு உணவை உண்ணுதல் நாளாந்த உணவைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பெறுமதியான சொத்துக்களை அடகுவைத்தல் மற்றும் ஏனைய உயிர்வாழும் உத்திகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ள அவர் அதிலிருந்தும் அவர்கள் சிறியளவு பயனையே பெறுகின்றனர்' – எனன் கூறினார்.



## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அந்த நாடுகளின் நாணயங்களில் நுழைவுச்சீட்டுகளை வழங்க நடவழக்கை

*கொழும்பு, ஒக். 16*

*நாட்டுக்கு வருகைத் தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அந்த நாடுகளின் நாணயங்களில் இணையத்தில் நுழைவுச் சீட்டுகளை வழங்குவதற்கான வாய்ப்பை வழங்க வனஜீவராசிகள் அமைச்சு தயாராகி வருகிறது.*

*குறிப்பாக தேசிய உயிரியல் பூங்காக்கள், தேசிய மிருக காட்சிசாலை மற்றும் காடுகளுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கே இந்த வாய்ப்பை வழங்க அமைச்சு தீர்மானித்துள்ளது.*

*மேலும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான நுழைவுச்சீட்டுகளையும் இணையத்தில் வழங்குவதற்கு முறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.*

*இது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதோடு, நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதே இதன் பிரதான நோக்கமாகும் என்றும் இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் இரு மாதங்களில் நிறைவு பெறவுள்ளன எனவும் வனஜீவராசிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.*

## ரயில் தாமதத்தை குறைக்கும் வகையில் புதியநேர அட்டவணை

கடலோரப் பாதையில் ரயில் தாமதத்தைக் குறைக்கும் வகையில் புதிய நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த அட்டனை எதிர்காலத்தில் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வீதி திருத்தப் பணிகள் தாமதமானால் ரயில்களை இயக்குவதில் தாமதம் தொடரலாம் என ரயில் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு கரையோரப் பாதையில் ரயில்களின் இயக்கம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சட்டவிரோத கடல் அட்டை பண்ணையால் பாரம்பரிய மீன்பிடித் தொழிலுக்குப் பாதிப்பு!

## கிராஞ்சி மீனவர்கள் கவலை

யாழ்ப்பாணம், ஒக். 16

சட்டவிரோத கடல் அட்டை பண்ணையால் பாரம்பரிய மீன்பிடி தொழிலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக, கிராஞ்சி – இலவங்குடா கிராம மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சியான எதிர்ப்பு தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அட்டைப் பண்ணை அமைப்பதற்காக கடற்கரையோரமாக இருக்கின்ற கண்டல் தாவரங்களை அழிப்பதால், மீன் இனப்பெருக்கம் தடைப்படுவதாகவும் பாரம்பரிய மீன்பிடி தொழிலாளர்கள் பாதிக்கப் படுகின்றனர் எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். கடல் அட்டை பண்ணை அமைப்பதால் பெண் தலை மைத்துவ குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மனித உரிமை ஆணைக்குழுவில் அளிக்கப்பட்ட முறைப்பாடுக்கு அமைய விசாரணைக்கு வருகை தந்திருந்த நீரியல் வளத்துறை அதிகாரிகள், அட்டை பண்ணை அமைப்பதற்கு எந்தவித சிபாரிசும் வழங்க வில்லை என கூறியிருந்தனர் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.




### நிலக்கரி ஏற்றிய முதலாவது கப்பல் தென்னாபிரிக்காவிலிருந்து புறப்பட்டது!

நிலக்கரி ஏற்றிய முதலாவது கப்பல் தென்னாபிரிக்காவில் இருந்து புறப்பட்டுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேற்படி கப்பல் எதிர்வரும் 24 அல்லது 25 ஆம் திகதி இலங்கையை வந்தடைய உள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கப்பல் 60 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரியை ஏற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின்னர் 10 நாள்களுக்குள் மேலும் மூன்று நிலக்கரி கப்பல்கள் இலங்கையை வந்தடையும் என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்தந்த கப்பல்களில் தலா 60 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரி கையிருப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் போதுமான நிலக்கரி கையிருப்பு நாட்டில் இருப்பதாக நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனிடையே, அவசரகால கொள்முதல் செய்வதற்கான கேள்வி கோரல் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக பல நிறுவனங்கள் ஏற்கனவே தமது தகவல்களை சமர்ப்பித்துள்ளன என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.











## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்




முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். ஒருசமயம், காட்டு வழியாகச் சென்றான் அவன். அங்கே புலியிடம் சிக்கிக் கொண்டிருந்த துறவி ஒருவரைக் காப்பாற்றினான்.

மகிழ்ந்த துறவி, பறவைகள், விலங்குகள் என்ன பேசினாலும் இன்றுமுதல் உனக்குக் கேட்கும், இப்படிப்பட்ட ஆற்றல் உனக்குக் கிடைத்திருக்கிறது என்ற உண்மையை யாரிடமும் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் தலை வெடித்து நீ இறந்து விடுவாய். போய் வா, என்றான்.

துறவியை வணங்கிவிட்டு அரண்மனைக்குப் புறப்பட்டான் அவன். வழியில் இருந்த விலங்குகள் பறவைகள் பேசிக் கொள்வது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது. தற்செயலாகக் கிடைத்த விந்தையான ஆற்றலை எண்ணி மகிழ்ந்தான் அவன்.

இரவு நேரம், அவனும் அரசியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள், அப்பொழுது சிறிதளவு தேனும் ஒரு உருண்டை சோறும் தவறித் தரையில் விழுந்தன.

அங்கிருந்த எறும்பு ஒன்று, ஓடி வாருங்கள், கூட்டமாக ஓடி வாருங்கள், நமக்கு இனி உணவுப் பஞ்சமே இல்லை. அரண்மனை மதுக் குடம் உடைந்து தேன் வெள்ளமாகப் பாய்கிறது. பெருஞ்சோற்று மலையே நமக்காகக் கிடக்கிறது, என்று உரத்த குரலில் தன் கூட்டத்தை அழைத்தது.

இதைக் கேட்ட அரசன், இரண்டு சொட்டு தேன், தேன் வெள்ளமா? ஒரு உருண்டை சோறு பெருஞ்சோற்று மலையா? இந்த எறும்பிற்கு அறிவே இல்லையா? இப்படியா வருணிப்பது? என்று நினைத்தான், அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

தன்னை மறந்து கலகலவென்று சிரித்தான் அவன்.

அருகிலிருந்த அரசி, ஏன் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டாள்.

ஒன்றும் இல்லை, என்று மழுப்பினான் அவன்.

சாப்பிட்டு முடித்த அரசன் பட்டு மெத்தையில் படுத்தான். அரசி வெற்றிலை பாக்கு மடித்து கொடுத்துக் கொண்டிருந்தாள். அறையில் இனிய மணம் பரவியது.

அங்கிருந்த ஆண் ஈ ஒன்று, பெண் ஈயை அழைத்து, எவ்வளவு இனிய சூழல் வா! நாம் இருவரும் அரசனின் முதுகில் இருந்து ஓடியாடி விளையாடுவோம். மகிழ்ச்சியாக இருப்போம். இதைப் போன்ற நல்வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்? என்றது.

என் முதுகு இந்த ஈக்களுக்கு மெத்தையா? என்று நினைத்தான் அரசன். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மீண்டும் கலகலவென்று சிரித்தான்.

ஏன் சிரிக்கிறீர்கள், என்று கேட்டாள் அரசி.

ஒன்றும் இல்லை, என்று வழக்கம் போல மழுப்பினான் அவன்.

உண்மையைச் சொல்லுங்கள். என்னிடம் எதையோ மறைக்கிறீர்கள்? நீங்கள் சொல்லாவிட்டால் நான் இனிமேல் உங்களுடன் பேச மாட்டேன். என் மீது உயிரையே வைத்திருப்பதாக நீங்கள் சொன்னதெல்லாம் நடிப்பு, என்று கோபத்துடன் சொன்னாள் அவள்.

என் உயிருக்கும் மேலாக நான் உன்னிடம் அன்பு வைத்திருக்கிறேன். நான் சிரித்ததற்கான காரணம் மட்டும் கேட்காதே என்றான் அவன்.

நீங்கள் சொல்லித்தான் ஆக வேண்டும், என்று வற்புறுத்தினாள் அவள்.

உண்மையைச் சொன்னால் என் உயிர் போய்விடும், என்றான் அவன்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்கள் சிரித்ததற்கான காரணம் எனக்குத் தெரிய வேண்டும், என்று அடம் பிடித்தாள் அவள்.

என்ன செய்தாலும் தன் மனைவியைச் சமாதானப் படுத்த முடியாது என்று உணர்ந்தான் அவன்.

என் உயிரைவிட உனக்கு நான் சிரித்ததற்கான காரணம் தெரிய வேண்டும். நாளை மாலையில் உனக்கு அந்த உண்மையைச் சொல்கிறேன். அப்படியே என் பிண ஊர்வலத்துக்கும் ஏற்பாடு செய்து வை. என்று வருத்தத்துடன் சொன்னான் அவன்.

பொழுது விடிந்தது. வழக்கம் போல அரண்மனைத் தோட்டத்தில் உலாவ வந்தான் அவன். மாலையில் இறக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் சோகமாக இருந்தான். அரண்மனை முழுவதும் அரசன் இறக்கப் போகும் செய்தி பரவி இருந்தது. உலாவிக் கொண்டிருந்த அவன் பின்னால் வளர்ப்பு நாய் சோகமாக வந்து கொண்டிருந்தது.

சிறிது தூரத்தில் அரண்மனைச் சேவல் பெட்டைக் கோழிகள் சூழ ஆரவாரமாக உலாவிக் கொண்டிருந்தன.

இதைப் பார்த்த நாயால் கோபத்தை அடக்க முடியவில்லை. ஏ! சேவலே! உனக்குச் சிறிது கூட நன்றி கிடையாதா? நமக்கு இவ்வளவு காலம் உணவு அளித்துக் காப்பாற்றியவர் இந்த அரசர். இன்று மாலை இவர் இறக்கப் போகிறார். எல்லோரும் சோகமாக இருக்கின்றனர். இந்தச் சூழலில் நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயே? இது நியாயமா? என்று கேட்டது.

அதற்குச் சேவல், நம் அரசர் பெரிய முட்டாள். அவருக்கு இருப்பது ஒரே ஒரு மனைவி. அவளுக்காக உயிரைவிடத் துணிந்துள்ளார். எனக்கு எத்தனை மனைவிகள் இருக்கிறார்கள் நீயே பார். என் பேச்சைக் கேட்டுத்தான் அவர்கள் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்குத் தண்டனை தருவேன். மனைவிக்காக இந்த அருமையான உயிரை நான் இழக்க மாட்டேன், என்று பதில் சொன்னது.

இந்தச் சிக்கலிலிருந்து அரசர் உயிர் பிழைக்க வழி இருக்கிறதா? என்று கேட்டது நாய்.

அரசர் மட்டும் அரசியிடம் உன்னைச் சவுக்கால் நூறு அடி அடிப்பேன். அதன் பிறகுதான் உண்மையைச் சொல்வேன் என்று சொல்லட்டும். எல்லாம் நல்லபடியாக நடக்கும், என்றது சேவல்.

நாயும் சேவலும் பேசிக் கொண்டிருந்ததை ஒன்று விடாமல் கேட்டான் அரசன். அரண்மனை திரும்பினான் அவன்.

மாலை நேரம் வந்தது. அவன் அருகே வந்த அரசி, இப்பொழுது உண்மையைச் சொல்கிறீர்களா? என்று கேட்டாள்.

நீ முதலில் சவுக்கால் நூறு அடி பெற வேண்டும். அதன்பிறகு நான் உண்மையைச் சொல்லிவிட்டு இறந்து விடுவேன், என்றான் அரசன்.

நான் சவுக்கடி பெற்றுக் கொள்கிறேன். எப்படியும் உண்மை தெரிந்தாக வேண்டும் என்றாள் அவள்.


அறைக்குள் அவளை அழைத்துச் சென்றான் அரசன். கையில் சவுக்கை எடுத்த அவன் அவளை ஓங்கி அடித்தான்.

பத்து அடியைக் கூட அவளால் தாங்க முடியவில்லை. மென்மையான அவளுடைய உடலிலிருந்து குருதி கசியத் தொடங்கியது. ஐயோ! போதும் அடிப்பதை நிறுத்துங்கள். உங்கள் உண்மையும் வேண்டாம். சவுக்கடியும் வேண்டாம், என்று அலறினாள் அவள்.

சவுக்கால் அடிப்பதை நிறுத்தினான் அவன்.

அதன்பிறகு இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

## ஒட்டகச்சிவிங்கி



உலகிலேயே மிக உயரமான விலங்கு எது? உலகிலேயே மிகப்பெரிய அசைபோடும் விலங்கு எது? இந்தக் கேள்விகளுக்கு விடை, ஒட்டகச்சிவிங்கி (Giraffe). ஒட்டகச்சிவிங்கிகள் ஆபிரிக்காவின் பல பகுதிகளில் காணப்படுகின்றன.

இவை 4.3 மீற்றர் முதல் 5.7 மீற்றர் (அதாவது, 14.1 முதல் 18.7 அடி) உயரம் வரை வளரக்கூடியவை.

இவற்றின் சராசரி எடை 828 கிலோகிராம் முதல் 1,192 கிலோகிராம் வரை இருக்கும்.

ஒட்டகச்சிவிங்கி தாவரஉண்ணி (Herbivore) இனத்தைச் சார்ந்தது.

இது மிக உயரமாக இருப்பதால், மற்ற தாவர உண்ணிகளுக்கு எட்டாத வகையில் வளரும் தாவரங்களையும் (இலை தழைகள், பூக்கள், பழங்கள்), இதனால் எளிதாக எட்டிபிடித்து உண்ண முடியும்.

இது மிக நீண்ட கழுத்து மற்றும் கால்களைக்கொண்டது.

இதன் நாக்கு 45 சென்ரிமீற்றர் (அதாவது 18 அங்குலம்) நீளம் வரை இருக்கும். நாக்கு நீளமாக இருப்பதால் தழைகளை சுற்றி வளைத்து உண்ணவும், மூக்கை சுத்தப்படுத்தவும் இந்த விலங்குக்கு ஏதுவாக இருக்கும்.

## கரடி மாமா



**குழந்தைகள்:-** கரடி மாமா கரடி மாமா எங்கே போறீங்க?
**கரடி:-** காட்டுப்பக்கம் வீடு இருக்கு அங்கே போகிறேன்
**குழந்தைகள்:-** கரடி மாமா கரடி மாமா எங்கே போறீங்க?
**கரடி:-** காட்டுப்பக்கம் வீடு இருக்கு அங்கே போகிறேன்
**குழந்தைகள்:-** கம்பளிச்சட்ட நல்லா இருக்கு யாரு தந்தாங்க?
**கரடி:-** கடவுள் தந்த சொத்துதான் வேற யாருங்க
**குழந்தைகள்:-** கம்பளிச்சட்ட நல்லா இருக்கு யாரு தந்தாங்க?
**கரடி:-**கடவுள் தந்த சொத்துதான் வேற யாருங்க

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

Page I | English for all | Sunday the 16th of October 2022



**We welcome students' articles in word for publication**

-Editor-

kalaikkathiredu@gmail.com


## 10th Anniversary Celebrations of Nippon Paint Lanka










The 10th Anniversary Celebrations of Nippon Paint Lanka were held on a grand scale on the 10th of October 2022 at Waters Edge! The event was held under the patronage of our Chairman and Chief Guest, Mr.Wang Chyang, General Manager, Mr.Nemantha Abeyshinghe, and Deputy General Manager, Mr.Daminda De Silva. All members of all departments of the Nippon Paint team took part in this extravagant event that was filled with entertaining music, delicious food, and unforgettable memories. While reminiscing the years gone by, they raised a toast to another ten successful years ahead!

# Marvelous Meerkats



The Kalahari Desert spans three African countries; it goes across Botswana, Namibia, and South Africa. The Kalahari Desert is a very special place. Like other deserts, it has sand. And like other deserts, it can get dry and very hot. But the Kalahari is not just a large, empty land. And it does not have only sand dunes. Unlike many deserts, the Kalahari gets some rainfall. There are some woodlands and some dry grasslands, too. When the summer rains come, flowers and plants bloom. Water holes fill up.

Many different kinds of animals live in the Kalahari. When it is very hot and dry, these animals find ways to stay cool. When it rains, they go to the watering holes to drink.

**01. On which continent would you find the Kalahari Desert?**

A. Asia B. Africa
C. North America D. Australia

**2. Which is not a fact about the Kalahari Desert?**

A Many kinds of animals live there.
B It is a very large desert.
C It is in three countries.
D It has only sand dunes.

**3. Which of these words is a preposition?**

A. and B. Kalahari
C. across D. goes

**4. What does the word spans mean?**

A. goes across B. is hot
C. rains D. goes under

**5. What does the phrase different from mean?**

A. similar B. like
C. unlike D. empty

**Fear not to negotiate; negotiate not out of fear- HENRY KISSINGER.**

# Marvelous Meerkats



Living in the Kalahari Desert isn't easy, but meerkats do it very well. Meerkats are small, furry mammals about two feet long. They are members of the mongoose family. They have sharp claws that are used for digging burrows and looking for food. Meerkats have long tails; they use their tails for balance so they can stand upright. Meerkats need to stand upright so that they can watch for danger.

Meerkats are built for life in the harsh desert. They live in underground tunnels. Their eyes have dark circles that act like sunglasses. They have special patches of skin on their bellies that absorb the sunlight, which they use to stay warm during the cold desert nights.

Meerkats are social animals. They live in groups called "mobs" or "gangs." Meerkat mobs work together to stay alive. For example, meerkats look for food during the day. When they are hunting, some meerkats stand guard to watch for enemies. Hawks and eagles like to eat meerkats; so do some other animals. So, meerkats always have to be on the lookout. If there is danger, the guards call out an alert. Then, all the meerkats return to their den.

Meerkats raise their young together, too. Baby meerkats are very tiny when they are born. Their eyes are closed and they are helpless. So the adult meerkats all take turns babysitting. They all work together as a team to take care of the baby meerkats. They teach the babies how to look for food and watch out for enemies. Baby meerkats take about a year to mature into adults.

What do meerkats enjoy eating? They usually eat bugs and small rodents, such as mice. Sometimes they eat small snakes, and they can even eat the poisonous scorpion. Its poison does not make them sick. Meerkats are very well adapted for their desert life!

**1. Why do meerkats need sharp claws?**

A. They use their claws for swimming.
B. They use their claws to dig burrows.
C. They use their claws to take care of the babies.
D. They use their claws to climb trees.

**2. Which of these is a topic sentence?**

A. They live in underground tunnels.
B. Their eyes have dark circles that act like sunglasses.
C. Then, they can stay warm during the cold desert night.
D. Meerkats are built for life in the harsh desert.

**3. The author wants the reader to**

A. learn about snakes and mice. B. raise a meerkat.
C. learn about meerkats. D. live in the desert.

**4. Which inference can be made about why meerkats live in underground tunnels?**

A. They are too large to live above ground.
B. They cannot see.
C. Tunnels help them keep warm during the cold desert night.
D. They do not like sunlight.

**5. Which of these words describes meerkats?**

A. solitary B. social
C. huge D. slow

**6. Which statement is most likely true?**

A. Meerkats do not need a lot of water.
B. Meerkats are good swimmers.
C. Meerkats have thick winter coats.
D. Meerkats lay eggs.

**7. Which of the following is not a supporting detail from the text?**

A. Adult meerkats take turns babysitting the young.
B. Meerkats eat bugs and small rodents.
C. Meerkats have short tails.
D. Meerkats live in underground tunnels.

**8. Which sentence from the text is a good summary of the text?**

A. Meerkat mobs work together to stay alive.
B. They live in underground tunnels.
C. What do meerkats enjoy eating?
D. Meerkats are very well adapted for their desert life!

## *Read the text and then answer the questions.*



The Kalahari Desert can get very hot. Summer is the hottest season there. The Kalahari is in the Southern Hemisphere. So, its seasons are different from the Northern Hemisphere. There, summer lasts from November to March. Winter lasts from May to August. In the summer, temperatures can rise to over 100 degrees during the day. At night, they go down to around 68 or 70 degrees. In the winter, temperatures during the day are about 77 degrees. But the nights can get very, very cold. Temperatures can drop to 14 degrees! The Kalahari is a desert, but it does get rain. The rain is usually not steady. Instead, it comes in thunderstorms. When it rains, dry water holes fill up. So do lakes. Flowers and plants bloom. Animals come to drink. The rainy season is between November and April. The rainiest month is usually April.

**1. What is this text mostly about?**

A. the climate of the Kalahari
B. the animals in the Kalahari
C. rain
D. the seasons

**2. Why does the Kalahari Desert have seasons that are different from the Northern Hemisphere?**

A. It is a dry desert.
B. It is very large.
C. It is in the Southern Hemisphere.
D. The rain comes in thunderstorms.

**3. Which is an independent clause?**

A. holes B. dry water
C. when it rains D. dry water holes fill up

**4. Which is an antonym of bloom?**

A. grow B. flower
C. wither D. blossom

**5. If the rainiest month is usually April, then the word usually tells you what?**

A. April is always the rainiest month.
B. April is most often the rainiest month.
C. It never rains in April.
D. There is no rain in the Kalahari.

# Presidential state car (United States)

### 1967 Lincoln Continental

President Johnson preferred white convertibles, but "concerns for protocol and safety" had him receiving a black 1967 Lincoln Continental as his state car. The hardtop cost the Ford Motor Company about $500,000 (equivalent to about $4,060,000 in 2021); they in turn leased it to the federal government for $1 (equivalent to $8.13 in 2021) per year. With 4,000 pounds (1,800 kg) of armor, "a bubble top thicker than the protective cockpit of an F-16 fighter", and a 340-horsepower (250 kW) V8 engine, the 11,000-pound (5,000 kg) car could still reach speeds of 100 miles per hour (160 km/h) — or 50 miles per hour (80 km/h) with four flat tires. This car also served Presidents Nixon, Ford, and Carter, and traveled to 32 nations before it was retired in the mid-to-late 1970s. In 1996, Ford restored the car to its original state and donated it to the Richard Nixon Presidential Library and Museum; the auto manufacturer chose Nixon's library because he took the car on several of his most-significant presidential trips.

### 1972 Lincoln Continental



***The 1972 Lincoln presidential limousine at The Henry Ford (2016)***

A modified, 22-foot (6.7 m), 13,000-pound (5,900 kg) 1972 Lincoln Continental was delivered to the White House in 1974. The six-passenger limousine was leased from the Ford Motor Company for US$5,000 (equivalent to $27,473 in 2021) per year and featured a 460-cubic-inch (7.5 L), 214-horsepower (160 kW) V8 engine. The fully loaded automobile also had external microphones to allow occupants to hear outside noises, full armor plate, bulletproof glass, and racks for the Secret Service to store submachine guns. This presidential state car was the vehicle in which President Gerald Ford was shot at by Sara Jane Moore, and that transported President Ronald Reagan to the hospital after the attempted assassination in March 1981.

### 1983 Cadillac Fleetwood



***The 1983 Cadillac Fleetwood presidential state car***

The next presidential state car was a 1983 Cadillac that was delivered on January 30, 1984. This Cadillac Fleetwood is 17 inches (430 mm) longer and 3 inches (76 mm) taller than the stock Fleetwood. It featured armor and bulletproof glass (2+3/8 inches [60 mm] thick), and was described as "distinctively styled, with a raised roof and a large rear greenhouse." To deal with the added weight of the armor, the car had oversized wheels and tires, heavy-duty brakes, and an automatic leveling system.

### 1989 Lincoln Town Car



***The 1989 Lincoln Town Car presidential state car***

The 1989 presidential state car that was delivered to the White House was a modified 1989 Lincoln Town Car that was 22 feet (6.7 m) long and more than 5 feet (1.5 m) tall.

### Clinton Cadillac Fleetwood



***The 1993 Cadillac Fleetwood presidential state car***

President Bill Clinton used a 1993 Cadillac Fleetwood as his presidential state car. It is currently on display at the Clinton Presidential Center in Little Rock, Arkansas where it sits with all its doors closed to the public. Museum curator Christine Mouw noted that they can "dust the outside of the car, but if we needed to get inside it, we would have to contact the regional Secret Service office".

CNN interviewed Joe Funk, a former Secret Service agent and driver of Clinton's presidential state car during part of his tenure. Funk described a dichotomy of the car: while the president is wholly cut off from the outside world by the armor and bulletproof glass of the vehicle, he has at his fingertips communication capabilities including phones, satellite communications, and the Internet.

### 2001–2009 custom Cadillac



***President George W. Bush's presidential limousine in Zagreb***

In 2001, for the first inauguration of George W. Bush, Cadillac no longer produced a car suitable for conversion into a presidential limousine. Furthermore, the additional armor and amenities that were added to the state car by the Secret Service taxed previous presidential limousines beyond their limits, resulting in failing transmissions and short-lived brakes. The George W. Bush state car was instead designed from the ground-up by "an R&D arm of General Motors in Detroit" to meet Secret Service speci fications."[I]nformed speculation" had President George W. Bush's Cadillac Deville actually based on the chassis of General Motors' line of full-size sport utility vehicles such as the "Chevrolet Suburban, GMC Yukon[,] and Cadillac Escalade." This "Deville" featured five-inch (130 mm) armored doors, and "bulletproof glass so thick it blocks out parts of the light spectrum." Rumored components of the car were sealed passenger compartments with their own air supply, run-flat tires, and a 454-cubic-inch (7.44 L) engine. Confirmed accessories include "an integrated 10-disc CD changer, a foldaway desktop[,] and reclining rear seats with massaging, adaptive cushions."[4] This presidential state car was estimated to weigh approximately 14,000 pounds (6,400 kg). Bush's presidential state car was nicknamed "The Beast", a name that persisted through the presidency of Donald Trump. When traveling, President Bush took along two of the armored limousines (flown by either C-5 or C-17), one for use and one for backup. This proved fortuitous during a 2007 trip to Rome where one of the presidential state cars stalled for five minutes on a street; the car was re-started, but was replaced with the backup limousine after President Bush reached his destination. Sometimes, President Bush would instead use vehicles already present at his destination such as embassy motor pool cars or military assets, rather than transporting the presidential state car. The president never used non-American-governmental vehicles when overseas.

### 2009–2018 custom Cadillac

A black Cadillac limousine is at a 45-degree angle, showing to the camera its front and starboard sides. Two small flagpoles are mounted to the front fenders, one flying a US flag with gold fringe.

A black Cadillac limousine is at a 45-degree angle, showing to the camera its rear and starboard sides. The trunk sports two antennae, there is a presidential seal on the rear passenger door, and the license plate is numbered "800 002".

Front and rear views of the 2009–2018 United States presidential state car

The 2009–2018 presidential state car went into service on January 20, 2009 and drove President Obama the two miles (3.2 km) down Pennsylvania Avenue from his inauguration to the inaugural parade. A Cadillac, the presidential state car was not based on any single model of car,[10] though it had the "dual-textured grille and the dinner plate-sized Cadillac coat-of-arms badge" emblematic of the Cadillac CTS and the Cadillac Escalade. The headlights and taillights were identical to those used on other Cadillac production models. Anton Goodwin of CNET's Road/Show blog noted that speculation was that the presidential state car was based on the GMC Topkick platform. If that is to be the case, then Goodwin assumed the car would feature either a gasoline-powered 8.1-litre (490 cu in) V8 General Motors Vortec engine or a diesel-powered Duramax 6.6-litre (400 cu in) turbo V8 engine. Autoweek magazine asserted that the car ran on a gasoline-fueled engine. This presidential state car was speculated to be much heavier than its predecessor as it is equipped with Goodyear Regional RHS tires that are usually reserved for medium- and heavy-duty trucks; speculated weights range from 15,000 to 20,000 pounds (6,800 to 9,100 kg).[12] Due to the weight of the car, it could only reach about 60 mph (97 km/h), and only achieved 3.7 to 8 miles per US gallon (64 to 29 L/100 km; 4.4 to 9.6 mpg-imp). The limousine was reported to cost between $300,000 and $1,500,000 (equivalent to about $400,000–1,700,000 in 2021).[1][19] The presidential state car was maintained by the United States Secret Service.



***President Barack Obama and then-Vice President Joe Biden riding in a presidential state car***

The car had more five-inch-thick (13 cm)[22] bulletproof glass than the previous model.

**(see page 12)**

It also had run-flat tires and an interior that was completely sealed to protect the occupants in the event of a chemical attack. The 2009 presidential state car model had night vision optics, a tear gas cannon, onboard oxygen tanks, an armored fuel tank filled with foam to prevent explosion, and pump-action shotguns. Whether it was or was not armed with rocket-propelled grenades, the car featured eight-inch-thick (20 cm) doors. General Motors spokeswoman Joanne K. Krell said of the presidential state car, "The presidential vehicle is built to precise and special specifications, undergoes extreme testing and development, and also incorporates many of the top aspects of Cadillac's 'regular' cars—such as signature design, hand-cut-and-sewn interiors, etc."[10] The curator of The Henry Ford told The Dallas Morning News that President Obama's state car was "a tank with a Cadillac badge."




***Washington, D.C. license plate***

In 2013, the presidential state car was outfitted with standard Washington, D.C. license plates that read "TAXATION WITHOUT REPRESENTATION" in reference to the district's lack of representation in the United States Congress. The switch came after the D.C. city council petitioned the president to use the plates on his motorcade, which would be seen by millions of people as the president headed down Pennsylvania Avenue for his second inauguration.[24]

**Development**


In 2014,[25] General Motors (GM) was awarded three contracts for the new limousine. Each state car was expected to cost US$1–1.5 million, and by January 2016, GM had been paid $15,800,765



(equivalent to $17,840,492 in 2021) for its work on the new model.

After prototypes of the new model were seen driven on public roads wrapped in monochromatic multi-scale camouflage, Cadillac confirmed to Fox News that "We've completed our task and we've handed over the vehicle to the customer". The Secret Service confirmed that the program to replace the presidential car was "on track and on schedule" and should be in service by late summer 2018. Fox News' Gary Gastelu opined that the camouflaged prototype looked similar to the Cadillac CT6.

**Realization**





***Front and interior views of the 2018 model car after the inauguration of Joe Biden on January 20, 2021.***



***Barack Obama's motorcade***

Still nicknamed "the Beast" (as established with the 2001–2009 model), the current model debuted with a presidential trip to New York City on September 24, 2018. Road & Track reported that "the design appears to be a simple evolution of the old model with more current Cadillac design cues, like an Escalade sedan." Road & Track described the state car as "massive and tall", and weighing between 15,000–20,000 pounds (6,800–9,100 kg). NBC News reported a weight of 20,000 pounds, the capacity to seat seven, and speculated that the limousine was intended to evoke the aesthetic of the Cadillac XT6. Business Insider reported in 2019 that the Beast is actually built upon a GM truck chassis. Car and Driver said that the car was built on the GMC TopKick platform, weighs as much as 15,000 pounds, has the headlamps from the Cadillac Escalade, and the grille emblematic of the Cadillac Escala concept car.

In addition to defensive measures designed to protect the president, this state car also has stores of blood in the president's type for medical emergencies. The car is hermetically sealed against fluid attacks, and features run-flat tires, night-vision devices, smoke screens, and oil slicks as defensive measures against attackers. NBC reported that the car features armor made of aluminum, ceramic, and steel; the exterior walls have a thickness of eight inches (200 mm), the windows are multi-layered and five inches (130 mm) thick, and each door—believed to weigh as much as those on a Boeing 757—can electrify its handles to prevent entry.

As of May 2019, the current model was used alongside the previous model.

**Destruction**

In the late 20th-century, it was customary for the United States Secret Service to participate in the destruction of the presidential state car after it had run its course. The federal agents use bullets and explosive rounds for two purposes. The first is to demonstrate the automobile's effectiveness against such weaponry, while the second is to shred the vehicle and destroy the secrets of its manufacture, armoring, and defensive abilities.

**Presidential motorcades**

Motorcades involving the presidential state car are detailed, involved operations. Motorcades under President George W. Bush involved up to two dozen cars; under President Barack Obama they constituted 30 other vehicles.

The Obama presidential motorcade included many other vehicles than the official presidential state car. Involved were police cars to lead the motorcade and clear the streets; sport utility vehicles to carry the United States Secret Service detail, electronic countermeasures, key staff, a counter-assault team, "hazardous-materials-mitigation" personnel and equipment, and White House Communications Agency personnel. Also included in the motorcade were press vans, an ambulance, and more.

The presidential state car is maintained by the United States Secret Service, while other support vehicles in the president's motorcade are maintained by the White House Military Office. Due to difficulty in organizing motorcades, helicopters (Marine One) are preferred.



# A Greedy Dog

Once there was a hungry dog. He run here and there in search of something to eat. At last, he found a bone from market. He picked the bone and ran towards the jungle. There was a stream on the way to his home. He saw his own mirroring in the stream water. He thought that there was another dog with a delicious bone in his mouth. He wanted to get the other bone too. He started barking to his own reflection. His bone fell into water as he opened his mouth. The greedy dog lost his bone in greed of another bone.

**Moral: Greed is Curse.**

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# “ஒரு படைப்பாளியின் சுய விளம்பரத்தினை நாம் பாராமல் அவர்களின் திறமையைத்தான் நாம் பாராட்ட வேண்டும்”

## நேர்காணல்

## SRI RJS யூடியூப் சனலின் உரிமையாளரும், பாடகியுமாகிய ஜான்னவி உடனான நேர்காணல்

**நேர்கண்டவர் - திருமலை தட்சா**



**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

எனது பெயர் ரமேஸ்தர்ஷன் ஜான்னவி. திருக்கோணமலை நான் பிறந்த மண்ணாகும். இவ் அழகான மாவட்டத்தின் வரலாற்றுத் தொன்மையையும், எம் இனத்தின் வரலாற்று சிறப்புக்களையும், தமிழரின் வரலாற்று வாழ்வின் சிறப்பியல்புகளையும் ஏனையவர்கள் அறிய வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே நான் சுமார் இரண்டு வருடங்களாக SRI RJS என்ற பெயரில் யூடியூப் சனலை நடாத்தி வருகின்றேன்.

**02) உங்களது SRI RJS யூடியூப் சனலை ஆரம்பித்ததற்கான ஆர்வம் குறித்து?**

நல்ல நிலம் பார்த்து பண்படுத்தி விதை விதைக்கின்ற மாதிரி நல்ல களம் பார்த்து தயார்ப்படுத்தி அதில் நல்ல அறிவான விடயங்களையும், எமது தொன்மையான கலை கலாச்சார பண்பாட்டு நாகரிகங்களை பார் முழுதும் விதைக்கவும், பாமரர்கள் மத்தியிலே பகுத்தறிவை விதைக்கவும் இதை நம் பின்வரும் சந்ததியும் பேணும் முறையை விதைக்கவும் மொத்தத்தில் என் திருகோணமலை மண்ணைப் பெருமைப்படுத்துவதற்காகவும் இவ் SRI RJS என்ற யூடியூப் சனலை ஆரம்பிப்பதற்கான ஆர்வம் பிறந்தது எனலாம்.

**03) இதன் மூலமாக எவ் வகையிலமைந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு பதிவிட்டு வருகிறீர்கள்?**

எங்களது முன்னோர்கள் அன்று சொன்னவற்றையும், நடாத்தியவற்றையும் தான் இன்று அறிவியல் கூறுகின்றது. இப்போது வாழும் சந்ததியினரும், இனி வரும் சந்ததியினரும் எமது பண்டைய விடயங்கள், பழங்காலத்து கலை கட்டிட வரலாற்றுச் சின்னங்கள், வரலாறு கூறும் சிற்பக் கோவில்கள் அமைந்த இடங்களையும் அனைவரும் அறிய வேண்டுமென்பதற்காக இப் பணியை முன்னெடுத்து பதிவிட்டு வருகின்றேன்.

**04) SRI RJS மூலமாக இலங்கையின் பழமை வாய்ந்த கோயில்கள், வரலாற்று இடங்கள் போன்றவற்றை பதிவிட்டு வரும் நீங்கள் அவ் இடம் சார் தகவல்களின் உண்மைத் தன்மையினை எவ்வாறான முறையில் பெற்றுக் கொள்கின்றீர்கள்?**

ஆம். இவற்றிற்காக நான் பல ஆய்வுக் கட்டுரைகள், அகழ்வாராய்ச்சி இடங்கள், அவற்றில் உள்ள அடையாள எச்சங்களை பார்வையிட்டு வாசித்து அறிந்தும் 90 வயதை தாண்டிய பல எம் இன,பிற இன மக்களிடையே நேர்காணல் மூலமாகவும், முதியோர்களின் வாய் மூலச் செய்திகளையும் வைத்துக் கொண்டு இவற்றின் மூலமாக நான் உண்மைத் தன்மையை பெற்றுக் கொண்டு வருகிறேன்.

**05) SRI RJS இன் ஆரம்ப காலப் பயணம் தொடக்கம் இன்று வரையில் மக்கள் மத்தியில் எவ்வாறான வரவேற்பை பெற்றுள்ளது?**

ஆரம்பத்தில் ஆரவாரமாக பார்க்காத மக்கள் காலப்போக்கில் வரலாறுகளை அறிவதற்காக மிகவும் ஆர்வமாக எங்கள் காணொலிகளை பார்வையிடுவதில் கிட்டுகின்ற இன்பம் அளவில்லாத பேரின்பமாக இருக்கின்றது போல நான் எண்ணுகின்றேன்.

**06) ஒரு விடயத்தை எடுத்து அதனை சரியான முறையில் மக்களுக்கு கொண்டு செல்லும் வரை எவ்வாறான சவால்களை முகங்கொடுத்து வருகின்றீர்கள்?**

இதனால் எமக்கு ஏற்பட்ட பல பாரிய பிரச்சினைகள். அதன் மூலம் எமக்கு விடுக்கப்பட்ட சவால்கள் என அத்தனை சவால்களையும் உடைத்தெறிந்து இதை கைவிடாது சவாலுகளுக்கெல்லாம் முகங்கொடுத்து செயலாற்றி வருகின்றோம்.

**07) எந்தவொரு காரணத்திற்காக இவ் களத்தினை தேர்வு செய்தீர்களோ அதன் எதிர்பார்ப்பை தற்போது பூர்த்தி செய்ய முடிந்துள்ளதா?**

ஓரளவிற்கு பூர்த்தி செய்துள்ளோம் என்றே நினைக்கின்றோம். இன்னும் நூறு வீதம் பூர்த்தியாகவில்லையே என்ற ஆதங்கம் எமக்குள்ளது. ஐம்பது வீதம் வரை எட்டியுள்ளோம். மிக விரைவில் எமது இலக்கை அடைவோம் என நாம் எதிர்பார்த்து அதற்கான செயற்திறன் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம்.

**08) தற்காலத்தில் இவ் டிஜிற்றல் உலகத்தினை பலரும் திறமைக்கான களமாக தேர்வு செய்து தங்களுக்கான அடையாளம் கிடைக்க போராடி வருகின்றனர். இது குறித்து உங்களது கருத்து?**

ஆம். தற்சமயம் திறமையுள்ளவர்கள் தங்களுக்கான களம் கிடைக்காததால் இவ் டிஜிற்றல் உல கத்தையே தங்களது களமாக தேர்ந்தெடுத்து வருகின்றார்கள் என்பது மிகவும் உண்மையான விடயமே. அவ் வகையில் ஒவ்வொரு படைப்பாளியும் தனது



அடையாளத்தை பொறித்து விடவே போராடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அதற்கான களமாக இது அமைந்தது சிறப்பான விடயம்தான். இருந்தும் இதன் மூலம் நமது தனித்துவ அடையாளத்தையும், இருப்பையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய களமாக இதைப் பயன்படுத்துவது சிறந்தது. ஒரு படைப்பாளியின் சுய விளம்பரத்தினை நாம் பாராமல் அவர்களின் திறமையைத்தான் நாம் பாராட்ட வேண்டும்.

**09) இத் துறை மீதான உங்களது பயணத்திற்கு பக்கபலமாக இருப்பவர்கள் குறித்து?**

பக்க பலமாக இருப்பதும், எமது தொன்மையான விடயங்களையும், பதிவுகளையும் அறிய ஆர்வம் காட்டுகின்றதும், அதைப் பாதுகாக்க நினைக்கும் மக்கள்தான். ஊருக்கு நீ உழைத்தால் உன்னருகே கடவுளும் இருப்பார். மக்களும் இருப்பார்கள்.

**10) இத்துறைத் தவிர, வேறு துறையில் உங்களது திறமைகள்?**

நான் ஒரு பாடகி. பாடும் திறமையோடு வீணை, வயலின் போன்ற வாத்தியக் கருவிகளை மீட்டும் திறனும் எனக்குள்ளது.

**11) நிறைவாக, இன்று பல பெண்களும் ஒவ்வொரு துறைகளில் தங்களது தனிப்பட்ட திறமைகளின் மூலம் அடையாளத்தைப் பெறுவதற்கு முயற்சித்து வருகின்றனர். இது குறித்து உங்களது அனுபவத்தினூடாக கூற விரும்புவது?**

அன்று பெண்கள் அடிமையாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்று பெண்கள் அதை உடைத்து தங்களது திறமைகளை மண்ணிலிருந்து விண்வரையும் தமது திறமைகளை வெளிப்படுத்தி போராடி வெற்றியும் கண்டு உள்ளனர். அந்த வகையில், நானும் எனக்குள் இருக்கின்ற திறமைகளை எனது கணவரின் உதவியோடும், குடும்பத்தாரின் உதவியோடும் இப்பாதையில் வெற்றி பெற இப்பயணத்தை கொண்டு செல்கின்றேன். இது போன்றே ஏனைய பெண்களும் தமக்குள் ஒளிந்திருக்கும் பல திறமைகளை வெளிக்கொணர்ந்து புகழுடன் வாழ வேண்டும். புகழினில் போதை இல்லையோ, நீ நினைக்கும் போதை வரும் நன்மை செய்து வாழு! இதுவே நான் அனுபவத்தினூடாக கூற விரும்புகின்றேன்.


நன்றி!

# அவ்ரோடித்

கொக்குப்பிட்டியின் வடக்கு முனங்கில்
சிந்திக்கிடந்த குண்டுமணிகளை
ஒன்றொன்றாய் அவள்
மணல் நீக்கி
சேகரித்துக் கொண்டிருக்கும் போதுதான்
முதன்முதலில் கண்டேன்
பிங்கீ மலர்களால் அலங்கரிக்கப்பட்ட
மரீன்றோஸ் இலைகளிலான
ஆடையை அணிந்திருந்தாள்
அவள் சிரசிலில் சூடியிருந்த
ஆல்பஸ் வெண்மலர் கிரீடத்தில்
சூரியனைப் பதித்திருந்தாள்
ஆயினும் அவள்
குண்டுமணிகளில் நாட்டம் கொண்டவளாக
வடக்கு முனங்கில்
கொண்டாடித் திரிந்தாள்
அவ்ரோடித்
மேற்குத்துறை ஓடையில் தொடங்கி
கிழக்கே கழிமுகம்வரை நீண்டுள்ள
தோப்புத்துறையின் இளவரசி
கட்டுக்கடங்காத மந்தைகளை
எனது கட்டுக்குள் வைத்திருந்த நானோ
அவளைக் கண்ட மாத்திரத்தில்
நல்லாயனுக்கான அங்கிகளை இழந்தும்
மந்தைகளைக் கைவிட்டும்
அவளைத் தொடரலாகினேன்
அவளிடமொரு மந்திரக்கோல் இருந்தது.
மந்திரக்கோலுக்கு கட்டுப்பட்டதாக
சூரியன்
எப்போதும் அவளது சிரசைவிட்டு
அகலாமலிருந்தது
கரை நீளம் படுத்திருந்த பாறைகளின் மீது
ஆழிமலர்கள் நிரம்பப்பெற்ற
விசாலித்த பூங்காவை கட்டியிருந்தாள்
பூங்காவைச் சுற்றி
சாட்டாமாறு மரங்கள்
மதிலாக நிமிர்ந்து நின்றன
மலர்வனம் நிறைய
சூரியப்பூச்சிகள், ஆழிக்குதிரைகள்
துள்ளித் திரிந்தன
இவை எல்லாவற்றையும்
இரசித்துக் கொண்டு
ஓரத்தே,
ஓய்வெடுக்கும் நூற்றாண்டுகளைக் கடந்த
மூப்படைந்த பேராமைகள்
இசங்கஞ்செடிகளை தொட்டுத்தவிவரும்
வாடைக்காற்றின் வாசனை
நந்தவனம் எங்கணும்
பரவிக் கிடந்தது
கொக்குப்பிட்டிக்
குண்டுமணிகளை தனது
நந்தவனத்தில் தூவிவிட்டாள்.
பெருமித்துச் சிரித்தாள்
நானோஅலைகளின்
இடுக்குகளில் மறைந்திருந்து
அவளை
காதலோடு இரசிக்கலானேன்
சிரசிலிருந்த சூரியனைக் கழற்றி
நடுத்துறையின் பாறையில்
உட்கார வைத்துவிட்டு
அவள் கடலில்
இறங்கியபோதுதான்
வாடை மறுகி
எக்காலத்துக்கும் ஒவ்வாத
கோடைகொண்டல்
அலைகளை அள்ளி
கரையில் வீசி எறிந்தபடி எழுந்தது
கொண்டலிடி முதலில்
சாட்டாமாறு மரங்களை முறித்துப்போட்டது
அவளது நந்தவனத்தை கிழித்து
கடலில் எறிந்தது
சூரியப்பூச்சிகளும் ஆழிக்குதிரைகளும்
கொக்குப்பிட்டி குண்டுமணிகளும்
சிதறடிக்கப்பட்டன
ஓய்வெடுத்த பேராமைகள்
தரையில்
புரட்டிப்போடப்பட்டன
இளவரசி அவ்ரோடித்
கடலிலிருந்து எழுந்துவந்தபோது
கொண்டலின் கோத்திரத்தார்
நடுத்துறைப் பாறையில் இருந்த
அவளது சூரியனை
தாறுமாறாய் பிய்த்தெடுத்து
தின்றுகொண்டிருந்தனர்

-தமயந்தி-

# கலைவக் கதிர்



# இலக்கிய ஊடல் என்பது

## இலக்கிய நயம்



ஊடல் என்பது மருதத்திணைக்குரிய உரிப்பொருள் ஆகும். மருதத்திணை பாடல்களை வகுக்கும் போது அதில் வரும் முதல், கரு, உரிப்பொருளில் ஒன்று வரினும் அப்பாடல் அத்திணைப்பாடல் என வகுக்கப்படும்.

ஐங்குறுநூறு என்னும் அகநூலில் ஐந்து திணைகளுக்கும் தனித்தனியேநூறு பாடல்கள் அமைந்துள்ளன. முதலில் வருவது மருதத் திணைப்பாடலாகும். ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணைக்கு வரும் நூறுபாடல்களும் பத்துப்பத்துப்பாடல்கள் கொண்ட சிறுபிரிவுகளாகப்பிரிக்கப்பட்டுள்ளன. மருத்தத்திணையில் முதலாவது பத்துப் பாடல்களும் வேட்கைப்பத்து என்பதாகும். அதில் வரும் ஒரு பாடலின் பொருள்: – திருமணத்தின் பின் களவுக்காலத் தில் என்னைப்பற்றி என்ன நினைத்தீர் எனக்கேட்ட தலைவனுக்குத்தோழி கூறிய பதிலாக இப்பாடல் அமைந்துள்ளது.

**மன்னன் ஆதன் வாழ்க! அவினி வாழ்க!**
**வேந்தனின் பகைமை கெட்டொழிக!**
**அவ்வேந்தன் நீடூழி வாழ்க!**

எனக்கூறித்தன் பிரிவுத்துயரை மறைத்து வாழ்ந்து வந்தாள் தலைவி. தோழியராகிய யாங்கள் தாமரை பூத்த நீராடும் துறை அமைந்த ஊருக்குத் தலைவன் விரைந்து வந்து எம் தலைவியை திருமணம் செய்க என்றும் தலைவனின் உறவினர் வந்து மகட்கொடை வேண்டும் பொழுதில் எம் தந்தையும் மறுக்காமல் திருமணத்திற்கு உடன்படுக எனவும் வேண்டிக் கடவுளைத் தொழுதோம் எனத் தோழியர் கூறினர்.

இப்பாடல் மருதத்திணைப்பாடல் என்று வகுக்கப்பட்டுள்ளது மருதத்திணைக்குரிய பாடலின் உரிப்பொருள் ஊடல் ஆகும். ஊடலுக்குரிய காரணம் தலைவனின் தகாத ஒழுக்கமாகும். கற்பொழுக்கத்தில் தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையரோடுமு பொதுமகளிரோடும் பலநாள் பழகிய பின் மீண்டும் தன் மனைக்குத் திரும்பும் போது தலைவி ஊடுவதாக அகப் பாடல்களில் பெரும்பாலும் சொல்லப்படுகிறது. ஊடல் கற்பு காலத்திற்குரிய உரிப்பொருள் ஆகும்.

இந்த ஐங்குறுநூற்றுப்பாடல் தலைவிக்கு திருமணம் ஆனபின் களவுக்காலத்தில் நடந்ததை பேசுகிறது. தலைவனும் தலைவியும் பிறர் அறியாவண்ணம் களவொழுக்கத்தில் ஈடுபட்டுவந்துள்ளனர். தலைவன் உன்னைப்பெற்றோர் உடன்பட திருமணம் செய்வேன் என உறுதி கூறிச்சென்றுள்ளான். அதை தோழி மட்டும் அறிவாள். பிறர் அறியாத அந்நிலையில் தலைவி மற்றும் தோழியின் மனநிலை எவ்வாறு இருந்தது என்பதை திருமணத்தின் பின் தோழி தலைவனிடம் கூறுவதாக உள்ளது. இது இப் பாடலின் துறை ஆகும்.

இப்பாடலில் மருதத்திற்கு உரிய ஊடல் உரிபொருளாக வரவில்லை. ஆயினும் இது மருதப்பாடல்? அகன்ற பொய்கையில் மலர்ந்த தாமரை பூத்த நீராடும் துறைகள் கொண்ட ஊரின் தலைவன் நம் தலைவியை மணம் முடிக்க வேண்டும் என்னும் இடத்தில் மருதநிலத்து ஊர் பற்றி வருவதால் கருப் பொருள் பற்றி மருதத்திணைப் பாடல் ஆயிற்று. தலைவி அரசன் பகை போர் இன்றி நீண்ட நாள் வாழ்க என்பதையே எண்ணித் தலைவி அமைதியாக பொறுத்திருந்தாள். தோழி மட்டுமே தலைவன் உடன் வந்து தலைவியை மணம் புரிய வேண்டும் தலைவியின் பெற்றோரும் மறுக்காமல் உடன்பட வேண்டும் எனத் தெய்வத்தை வேண்டியிருந்தாள்.

நீர் நிறைந்த குளத்தில்தாமரை பூத்துள்ள ஊருக்குத் தலைவன் எனக்கூறியதினால் தலைவனின் உயர்வும் திருமணம் செய்துகொள்வான் என்னும் உள்ளுறை பொருள் உணர்த்தப்படுகிறது.

ஆதன் அவினி என்பது சேரமன்னன் பெயராகும். தலைவி தன் நாட்டு மன்னன் போரின்றி நீடு வாழ்ந்தால் தன் வாழ்வும் சிறக்கும் என எண்ணிப் பொறுத்திருந்தாள். தலைவனைப் பிரிந்த வருத்தத்தில் கண்ணீர் விட்டால் பிறர் அவள் களவு ஒழுக்கத்தை அறிந்து அலர் பேசுவர்.

தலைவனும் தலைவியும் காதலித்தபின்னும் அவர்கள் தாமே திருமணம் செய்து கொள்ளவில்லை. தலைவன் உறவினர் தலைவியின் பெற்றோரிடம் பெண் கேட்டு வருவர். அப்போது தலைவியின் தந்தை மறக்காமல் உடன்பட வேண்டும் என்பதே தோழி இறைவனிடம் வேண்டுவதாகும்.

இப்பாடல் அழகியது. இம்மருததிணைப்பாடலில் ஊடலே இல்லை.

நிலம் மட்டும் மருதம் பழந்தமிழர் திருமணத்தில் பெண்ணின் பெற்றோர் உடன்படவே திருமணம் நடந்தது என்பதை அறியலாம்.

# போதைப்பொதிகளும் புரியாத புதிர்களும்...!

போதை நெருப்பில்
விட்டில்களாய்....
ஆறறிவுக்குள்
அகப்பட்ட மனிதஜாதியின்
வாரிசு நீ என
உச்சரிக்கவே வெட்கமடா...

இனிய கனவுகளை யாசித்து
உனக்காக பல
துன்பங்களைச் சுமந்தவள்
எதிர்காலம் நீ என்பதற்காய்
உன்னை தோள் சுமந்து
உழைத்து மாய்ந்தவன்...
இவர்களை மறந்த நீ
போதை விலங்கை
உன்கைகளுக்கு நீயே....!

திட்டமிட்ட சதியின்
அரங்கேற்றங்கள் நடந்தேறுகின்றன
வேலிகளே இங்கு பயிர்களை
மேய்கின்றன சில மறைகரங்களின்
மனமுவந்த அனுசரணைகளுடன்

மழையோடு மழையாகமுன்பு
வானத்திலிருந்து தம்பலப்பூச்சிகள்
மண்ணிலே விழுமாம்
இப்போது வேளைதெரியாத
பொழுதுகளெல்லாம்
போதைப் பொதிகள்
காவலின் கண்களில்
மண்ணைத்தூவி விழுகின்றனவோ
என விளங்காத புதிராக....?

கையும் மெய்யுமாய் பிடிபடுபவன்
கையோடு மிகக் கம்பீரமாக களத்தில்
கையிலே இன்னும் அதிகமாக...
அது எப்படி....?

பணம் பண்ணுவதே
பாதையாய் வகுத்தவன்
புதுப்புதுப் பெயர்களில் போதையை
வில்லைகளாய் ஊசிகளாய்
துண்டு துகள்களாய்...!

தடுப்பதுபோல தடுக்கப்பட்டு
பின்பு...
தாராளமாக பச்சைக்கொடி
அசைப்புக்கள் சிருசுகளின்
பள்ளிப் பைகளுக்குள்ளும் இப்போ
புகுந்துவிளையாடவேண்டியவிதத்தில்..

வெள்ளையுடை வேஷதாரிகளான
சில அதிகாரக் கதிரைகளின்
சொத்துக் குவிப்புப் பேராசையில்..
நரகத்தை நோக்கி
நகர்கின்றது நாடு..!
மீட்டெடுக்க மேலெழவேண்டும்
இன்னுமொரு பேரலை..
விரைந்ததொரு வேகத்தில்...!

-ஷெல்லிதாசன்-

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

## படித்தோம் சொல்கின்றோம்:

- முருகபூபதி -

# பத்திரிகையாளர் எஸ்.எம்.கார்மேகம் வாழ்வும் பணிகளும்



## இலங்கை மலையக மக்களின் குரலாக ஒலித்தவரின் சேவைகளைப் பேசும் நூல்!!

சமூகத்திற்காக பேசுவதும், சமூகத்தை பேச வைப்பதுமே பத்திரிகையாளர்களினதும் படைப்பாளிகளினதும் பிரதான கடமை.

அந்தவகையில் இலங்கையில் வீரகேசரி நாளிதழில் நீண்டகாலமும் பின்னர் தமிழ்நாட்டில் தினமணி நாளிதழில் பல வருடங்களும் பணியாற்றியவரான எஸ்.எம்.கார்மேகம் அவர்களின் வாழ்வையும் பணிகளையும் தொகுத்து ஆவணப்படுத்தியிருக்கும் இந்த நூலை வெளிக்கொணர்ந்துள்ள ஊடகம், பொது வாழ்க்கை சார்ந்து அயராமல் இயங்கிவரும் எச். எச். விக்கிரமசிங்க பாராட்டுக்குரியவர்.

இந்த நூல் மூன்று பகுதிகளாக அமைந்திருக்கிறது. கார்மேகம் அவர்களை நன்கறிந்த பலரது நினைவுப் பகிர்வு முதல் பகுதியாகவும், அஞ்சலிக்குறிப்புகள் சார்ந்த பகிர்வு இரண்டாவது பகுதியாகவும், ஒளிப்படங்களின் தொகுப்பாக மூன்றாவது பகுதியும் இடம்பெற்றிருக்கின்றமையால், இந்நூல் கார்மேகம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் என்பதற்கும் அப்பால் சென்று, இலங்கையின் அரசியல் பொருளாதார சமூக மாற்றங்கள் குறித்தும், இலங்கைப் பொருளாதாரத்தில் கூடுதல் அந்நியசெலாவணியை ஈட்டித்தந்த மலையக இந்திய வம்சாவளி மக்களின் முன்னேற்றத்தில் கார்மேகம் அவர்களின் வகிபாகம் எத்தகையது என்பது பற்றியும் விரிவாக விளக்கியிருக்கிறது.

இந்நூலுக்கு தமிழ்நாடு கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் அணிந்துரையும், முன்னுரையை பத்திரிகையாளர் இராஜநாயகம் பாரதியும், வெளியீட்டுரையை நூலின் தொகுப்பாளர் எச். எச். விக்கிரமசிங்கவும் எழுதியுள்ளனர்.

முதல் பகுதியில் இங்கிலாந்தில் வதியும் பேராசிரியர் மு. நித்தியானந்தன் முதல் அவுஸ்திரேலியாவில் வதியும் கார்மேகம் அவர்களின் செல்வப்புதல்வி கலை, இலக்கிய ஆர்வலர் திருமதி கனகா கணேஷ் வரையில் மொத்தம் 45 பேர் எழுதியிருக்கின்றனர்.

மூன்றாம் பகுதியில் ஏராளமான அபூர்வமான படங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. இவற்றை சேகரித்து



ஆவணப்படுத்துவதற்கு தொகுப்பாளர் விக்கிரமசிங்க மேற்கொண்டிருக்கும் கடின உழைப்பும் போற்றுதலுக்குரியது.

ஒன்பது தசாப்பதங்களை கடந்து வெளியாகிக்கொண்டிருக்கும் வீரகேசரி பத்திரிகை அமைந்துள்ள கட்டடத்தில்தான் (185, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14) முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனா 1906 ஆம் ஆண்டு பிறந்திருக்கிறார் என்ற செய்தியையோ, மகாகவி பாரதியாரின் அருமை நண்பர் வ. ராமசாமி வீரகேசரியில் அதன் தொடக்க காலத்தில் ஆசிரியராக பணியாற்றினார் என்பதையோ இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்கமாட்டார்கள்.

இந்த வரலாற்றுக் குறிப்புகளையெல்லாம் உள்ளடக்கித்தான் கார்மேகம் அவர்கள் ஒரு நாளிதழின் நெடும்பயணம் என்ற நூலையும் எழுதியிருந்தார்.

கார்மேகம் செய்தியாளராக மாத்திரம் இயங்கவில்லை. அவ்வாறு செயற்பட்டிருப்பின் சமூகத்தில் பேசப்படாமல் காலப்போக்கில் காணாமல்போன பல பத்திரிகையாளர்களின் பட்டியலில் இணைந்திருப்பார்.

இந்தப்பதிவின் தொடக்கத்தில் நாம் குறிப்பிட்டிருந்ததைப்போன்று அவர் சமூகத்திற்காக குறிப்பாக நலிவுற்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காகப் பேசினார். அவர்கள் தரப்பிலிருந்து தோன்றிய எழுத்தா



ளர்கள், கலைஞர்கள், சமூகச்செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள், அனைவரையும் பேசவைத்தார். இயங்கவைத்தார்.

மலையகத்தில் விழிப்புணர்வை தோற்றுவிக்க தனது எழுத்தாயுதத்தை பயன்படுத்தினார். அதனால்தான் ஏனைய பல பத்திரிகையாளர்களிலிருந்து கார்மேகம் வேறுபடுகிறார்.

அவர் எழுதிய ஈழத்தமிழர் எழுச்சி என்ற நூல் அரசியல் ஆய்வாளர்களுக்கும் வரலாற்று மாணவர்களுக்கும் உசாத்துணையாகியது. கண்டி மன்னர்கள் என்ற நூலையும் வரவாக்கி, இலங்கை அரசியலில் இம் மன்னர்களின் வகிபாகத்தையும் பதிவுசெய்தவர்தான் கார்மேகம்.

நெருப்பிலிருந்து பிறக்கும் ஃபீனிக்ஸ் பறவையாகவே கார்மேகம் வாழ்ந்திருக்கிறார் என்பதற்கு ஆதாரமாக பேராசிரியர் மு. நித்தியானந்தனின் நீண்ட கட்டுரை பேசுகிறது. அவரது ஆக்கத்தின் தலைப்பு மலையகத் தமிழர் விரோத அரசியலின் சிருஷ்டி என்றே அமைந்திருப்பதிலிருந்து உள்ளடகத்தை புரிந்துகொள்ள முடியும்.

மலையகத்தின் வரலாற்றையே நித்தியானந்தன் இக்கட்டுரையில் முடிந்தவரையில் பதிவு செய்திருக்கிறார். அதனால், அந்த வரலாற்றுடன் பயணித்தவராக கார்மேகம் திகழ்ந்திருக்கிறார் என்பதையும் இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

பேராசிரியர் மு. நித்தியானந்தன், தெளிவத்தை ஜோசப், எம். வாமதேவன், அன்னலட்சுமி ராஜதுரை, சந்திரா, மாத்தளை கார்த்திகேசு, ஏ.கே.சுப்பையா, சிவா. சிவப்பிரகாசம், ஆர்.பிரபாகர், வீ. தனபாலசிங்கம், எஸ். திருச்செல்வம், கே. எஸ். சிவகுமாரன், எச். எச். விக்கிரமசிங்க, முருகபூபதி, வீரகேசரி மூர்த்தி, எஸ். கிருஷ்ணன், ஸ்ரீஸ்கந்தராஜா, மல்லிகை சி. குமார், மு.சிவலிங்கம். ஏ.கே.எம். பிள்ளை, சிவலிங்கம் சிவகுமாரன், அருள். சத்தியநாதன், என். எம். அமீன், இ.தம்பையா, கே.வி. எஸ்.மோகன், பி.எம்.லிங்கம், மாத்தளை வடிவேலன், கே.நித்தியானந்தன், ரா.மு.நாகலிங்கம், கந்தையா சற்குணம்,ஏ.கே.விஜயபாலன், வேல். அமுதன், மா. சந்திரசேகரன், பி.சுந்தர்ராஜன், இ.கோபாலன், மலரன்பன், மாத்தளை சோமு, கே. கோவிந்தராஜ், கே.வேலாயுதம், அல். அஸூமத், பேராசிரியர் சோ.சந்திரசேகரம், மானா. மக்கீன், பேராசிரியர் ரீ பிரசாந்தன், கனகா. கணேஷ் ஆகியோரின் பதிவுகள் இடம்பெற்றுள்ள இந்த நூலில் அமரர் கார்மேகம் அவர்களின் வாழ்க்கை சமூகத்திற்கு எத்தகைய வழிகாட்டுதலை வழங்கியிருக்கிறது என்ற அழுத்தமான செய்தியையும் சொல்லியிருக்கிறது.

இந்தப்பதிவுகளை எழுதியவர்கள், இலங்கை, தமிழகம், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா முதலான நாடுகளில் வதிபவர்கள். சிலர் மறைந்துவிட்டனர். எனினும் இவர்களும் கார்மேகத்துடன் பயணித்தவர்களே!


மலையக மக்களை கல்வி, பொருளாதாரம், அரசியல், கலை, இலக்கியத்துறையில் ஈடுபடச்செய்வதற்காக சில சமயங்களில் **One man army** ஆகவும், சிலவேளைகளில் அனைவரையும் அணைத்துக்கொண்டு கூட்டாகவும் இயங்கியவர் கார்மேகம் என்பதை இந்த நூலில் இடம்பெற்றுள்ள ஆக்கங்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

கார்மேகம் அவர்களின் திருமண வரவேற்பு (1968) நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம் முதல் சுமார் 75 படங்கள் ஆவணமாக தொகுக்கப்பட்டிருப்பதும் இந் நூலுக்கு மகுடமாகியிருக்கிறது.

தனது வாழ்நாளில் பெரும்பகுதியை மலையக மக்களுக்காகவும், ஊடகத்துறைக்காகவும் செலவிட்டிருக்கும் கார்மேகம், தனது குடும்ப விடயத்தில் எத்தகைய சிறந்த தலைவனாகவும் திகழ்ந்திருக்கிறார் என்பதை அவரின் புதல்வி திருமதி கனகா. கணேஷ் நெகிழ்ச்சியுடன் சொல்லியிருக்கிறார்.

புதிய தலைமுறை ஊடகவியலாளர்களுக்கு மூத்த பத்திரிகையாளர் கார்மேகத்தின் வாழ்வும் பணிகளும் முன்னுதாரணமாகத் திகழவேண்டும் என்ற செய்தியையும் இந்நூல் இழையோட விட்டிருக்கிறது.

தொகுப்பாளர் எச். எச். விக்கிரமசிங்கவுக்கு எமது வாழ்த்துக்கள்.









காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# பின்னடைவுகளுக்கு மத்தியிலும் பிரி. – இந்தியா வர்த்தக ஒப்பந்தம்

## இருநாடுகளின் அதிகாரிகளும் முழு நம்பிக்கை

கடந்த வாரம் பிரிட்டிஷ் உள்துறைச் செயலாளரின் கருத்துக்களால் வர்த்தகப் பேச்சுக்களில் பின்னடைவு ஏற்பட்டாலும், பிரிட்டன் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் உள்ள அதிகாரிகள், இந்தியா – பிரிட்டன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், ஒக்டோபர் இறுதியில் – அதற்கான ‘தீபாவளி காலக் கெடுவிற்கு’ முன்னதாக இல்லாவிட்டாலும் விரைவில் – பூர்த்தியாகும் என்று தெரிவித்தனர்.



ஒப்பந்தத்துக்கான பேச்சு
புதுடில்லியில் ஆரம்பமான போது...

நவம்பர் மாத தொடக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் பிரிட்டன் வருகை திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் ‘தி ஹிந்து’விடம் உறுதிப்படுத்தினர், அப்போது இந்தியப் பிரதமருக்கும் பிரிட்டிஷ் பிரதமர் லிஸ் ட்ரஸ்ஸுக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஒரு கட்டமைப்பில் கையெழுத்திடப்படும். அதே நேரத்தில் தீர்க்கப்படாத பிற சிக்கல்கள் பின்னர் தீர்க்கப்படும்

ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவலின்படி, பிரிட்டிஷ் அரசாங்கம் தீபாவளிக்குள் (ஒக்டோபர் 24) ஒப்பந்தத்தை முடிக்க இன்னும் நம்புகிறதா என்று புதன்கிழமை கேட்டபோது, திருமதி ட்ரஸ்ஸின் செய்தித் தொடர்பாளர், ஆம், இந்தியாவின் வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கத்தினரின் வழங்கலுக்கான வரிசையில் இங்கிலாந்தை முன்னணியில் வைக்கும் இந்த உயர் லட்சிய இலவச வர்த்தக ஒப்பந்தத்திற்காக நாங்கள் பணியாற்றி வருகிறோம்.” – என்றார்.

‘தி ஹிந்து’வுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதில்களில், சர்வதேச வர்த்தகத்திற்கான பிரிட்டன் திணைக்களத்தின் பேச்சாளர் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம ஓர் ‘உயர்ந்த லட்சிய ஒப்பந்தம்’ என்றும், ‘நேரடி பேச்சுவார்த்தைகள்’ குறித்து அவர்கள் கருத்து தெரிவிக்க மாட்டார்கள் என்றும் கூறினார்.

வேகத்திற்காக (விரைவுக்காக) தரத்தை நாங்கள் தியாகம் செய்ய மாட்டோம் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். மற்றும் இரு நாடுகளின் நலன்களைப் பூர்த்தி செய்யும் (வடிவத்தை) ஒப்பந்தம் எட்டும்போது மட்டுமே நாம் கையெழுத்திடுவோம்” என்று செய்தித் தொடர்பாளர் மேலும் கூறினார்

கடந்த வாரம் பிரித்தானிய உள்துறைச் செயலர் சுயெல்லா பிரேவர்மேன், சட்டவிரோத இந்தியக் குடியேற்றவாசிகள் குறித்து தெரிவித்த விமர்சனக் கருத்துக்களுக்குப் பிறகு, இந்திய மற்றும் இங்கிலாந்து வர்த்தக அதிகாரிகளுக்கு இடையே



இந்தியப் பிரதமர் மோடி

யான பேச்சுக்கள் பின்னடைவைச் சந்தித்தன, அதை இந்தியா எதிர்கொண்டது.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஏப்ரலில் மோடி – ஜான்சன் உச்சிமாநாட்டில் எதிர்பார்க்கப்பட்டபடி இவ்விடயத்தை ஒப்பேற்றும் தீபாவளி காலக்கெடுவு வரவுள்ள நிலையில் ஒப்பந்தத்தை முடிக்க இரு தரப்பிலிருந்தும் உந்துதல் இருந்தபோதிலும், இயக்கம், தரவு உள்ளூர்மயமாக்கல் விதிமுறைகள், ஸ்கொட்ச் விஸ்கி மீதான கட்டணங்களைக் குறைத்தல் மற்றும் சட்ட சேவைகளுக்கான அணுகல் உள்ளிட்ட நிலுவையில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்படாமல் உள்ளன.

“இருபுறமும் பல ஒட்டும் புள்ளிகள் உள்ளன. பிரிட்டன் தரப்பில் இருந்து, அவர்கள் பிரிட்டன் நிறுவனங்களுக்கு நிதி மற்றும் சட்ட சேவைகளை அனுமதிக்க இந்தியாவைத் தூண்டுகிறார்கள், அதே நேரத்தில் இந்தியாவில் இருந்து, அது சாதகமான குடியேற்றம் மற்றும் விசா முறைமைக்கு அழுத்தம் கொடுக்கிறது, என்று முன்னேற்றங்களை நன்கு அறிந்த ஒருவர் ‘தி ஹிந்து’விடம் கூறினார்.



பிரிட்டிஷ் பிரதமர் லிஸ் டிரஸ்

இந்திய குடியேற்றம் மற்றும் நடமாட்டத்தை அதிகரிக்கும் ஒப்பந்தம் குறித்து தன் கருத்து ‘ஒதுக்கீடுகளை’ வெளிப்படுத்திய பிரிட்டனின் புதிய உள்துறை செயலர் சுயெல்லா ப்ரேவர்மேன் எடுத்த கருத்துக்கள் மற்றும் நிலைப்பாடு, நடமாட்டம் மற்றும் குடியேற்றம் மற்றும் தாராளமய விசா பற்றிய சர்ச்சைக்குரிய சிக்கலைமேலும் மோசமாக்கியுள்ளது என்று அந்த அதிகாரி மேலும் கூறினார். நடமாட்டம் மற்றும் குடியேற்றம் மற்றும் தாராளமய விசா நிர்வாக முறைமை தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கியப் பகுதியாகைருக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருந்தது.

புதனன்று, பிரிட்டனைத் தளமாகக் கொண்ட டைம்ஸ் செய்தித்தாள் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின்ன் பேச்சுவார்த்தைகள் ‘சரிவின் விளிம்பில்’ இருப்பதாகக் கூறியது. திருமதி பிரேவர்மேன் கூறிய கருத்துக் களில் இருந்து பிரதமர் ட்ரஸ் பகிரங்க மாகத் தன்னை விலகிக் காட்டியிருக்க வேண்டும் என்று இந்திய அரசாங்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி அது குறிப்பிட்டது.

கூடுதலாக, இங்கிலாந்து குடிமக்களுக்கு இ – விசாவை மீட்டெடுத்து வழங்க வேண்டாம் என்ற இந்தியாவின் முடிவைப் பற்றி ஒரு சலசலப்பு ஏற்பட்டது. இது (இந்தியருக்கான) விசாக்கள் மீதான நீண்ட இங்கிலாந்து தாமதங்களுக்கு பதிலளிக்கும் விதமாக இருக்கலாம். ஆனால், ஆயிரக்கணக்கான பிரிட்டிஷ் பயணிகள் மற்றும் வணிகர்களின் புகார்கள் மற்றும் பயண ரத்துகளுக்கு வழி வகுத்தது என இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், வேறுபாடுகள் இருந்தபோதிலும், இரு தரப்பினரும் ஒரு பரந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடிவு செய்துள்ளனர் எனவும், அதே நேரத்தில் ஒட்டுதல் புள்ளிகள் குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்துள்ளனர் எனவும், மேலும் நவம்பர் 7 – 8ஆம் திகதிக்கு முன்னதாகவே மோடி இங்கிலாந்தில் இருக்கக்கூடும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்க பிற ஆதாரங்களின்படி, நவம்பர் நடுப்பகுதியில் பாலி ஜி – 20 உச்சிமாநாட்டிற்குப் பிறகு, பிரதமர் மோடிக்கு பிஸியான பயண அட்டவணை உள்ளது அத்துடன் திரு. டிசம்பரில் இந்தியாவின் ஜி20 அமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்கும் மாதத்தின் போது ஐ.நா.பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்திற்கு தலைமை தாங்குவது மற்றும் வொஷிங்டனுக்கு சாத்தியமான விஜயம், கூடுதலாக, டிசம்பரில் குஜராத் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தல்கள் போன்றவை மோடியின் அட்டவணையில் பெரும் பகுதியை எடுத்துக்கொள்ளும்.

லண்டன் பயணத்தின் போது, மோடி, பிரிட்டிஷ் மன்னர் மூன்றாம் சார்ள்ஸைச் சந்திப்பார் என்றும், அவரது தாய் ராணி எலிசபெத்தின் மறைவுக்கு தனிப்பட்ட முறையில் இரங்கல் தெரிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், அப்போதைய இளவரசர் சார்ள்ஸ், 75 ஆண்டு சுதந்திரத்தை கொண்டாடும் நவம்பர் மாதம் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய முன்மொழியப்பட்டது. ஆனால் திட்டமிடல் சிக்கல்கள் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது.




சர்ச்சையை ஏற்படுத்திய பிரிட்டிஷ்
உள்துறை அமைச்சர் பிரேவர்மேன்

# தமிழ் கூறும் நல்லுலகு என்றுமே மறக்க முடியாத ஒரு வழிகாட்டி தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்

## இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு அவர் பணியை உணர்த்துவோம் – 06

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)




### தனிநாயகம் அடிகள் சாதித்தது என்ன?

உலக தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற அடியிட்டு 1966இல் (ஏப்ரல் 17 – 23) மலேசியாவில் முதல் தமிழாராய்ச்சி மாநாட்டையும், 1968இல் இந்தியா சென்னையில் இரண்டாம் தமிழாராய்ச்சி மாநாட்டையும், 1970இல் (15 – 18 ஜூலை), பிரான்ஸ் பரிஸில் மூன்றாம் தமிழாராய்ச்சி மாநாட்டையும், 1974இல் (3 – 9 ஜனவரி) இலங்கை யாழ்ப்பாணத்தில் நான்காம் தமிழாராய்ச்சி மாநாட்டையும் நடத்தி அதன் தொடராக 2019ஆம் ஆண்டு அமெரிக்கா சிக்காகோ நகரில் 10 உலக தமிழாராய்ச்சி மகாநாடும், 2023ஆம் ஆண்டு சிங்கப்பூ





ரில் 11ஆவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுன் நடைபெற அடியிட்டுள்ளார்.

கரவெட்டி மண்ணின் மைந்தனாக கனடாவில் வசிக்கும் திருவாளர் அன்ரன் பிலிப் சின்னராசா அவர்கள் 2013ஆம் ஆண்டு தனிநாயகம் அடிகளின் இறப்பின் நூற்றாண்டு நிறைவில் (1913 – 2013) தனிநாயகம் அடிகளார் வாழ்வும் பணியும் பற்றித் தயாரித்த போஸ்ரர் படங்கள் பல இந்த ஆக்கத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

மலேசியா – சென்னை – பரிஸ் – யாழ்ப்பாணம் ஆகிய நான்கு இடங்களில் கூட்டிய உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் வழி தனிநாயகம் அடிகள் சாதித்தது என்ன என்ற கேள்விக்குப் பதிலாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மறைந்த சு. வித்தியானந்தன் அவர்கள் தெரிவித்தவற்றை இங்கு குறிப்பிடலாம்.



(01) தமிழ் இலக்கியம் பற்றியோ மொழி பற்றியோ ஆராயும் உரிமை தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவருக்கே உரியது என்ற நிலை தகர்த்தெறியப்பட்டது.

(02) தமிழாராய்ச்சி குறுகிய எல்லைக்குட்பட்டிராது பரந்து விரிந்து பல துறைகளில் விருத்தியடைய வழி திறந்து விடப்பட்டது.

(03) தமிழ் இலக்கியம் – தமிழ் இலக்கணம் என்பவற்றில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிதான் ஆராய்ச்சி என்ற நிலை மாறி தமிழ் மக்கள் வரலாறு – தமிழ் மக்கள் மனிதவியல் – தமிழ் மக்கள் சமயங்கள் – தத்து








வங்கள் – தமிழ்த் தொல்பொருளியல் – தமிழ்நாட்டவர், பிறநாட்டவர் தொடர்பு – தமிழர் பண்பாடு – தமிழ் கலைகள் – தமிழ் மொழியியல் எனப் பரந்து விரிந்தது.

(04) தனிநாயகம் அடிகளின் முயற்சியின் பயனாக




தமிழ் இலக்கியத்தின் சிறப்பு பற்றியும் பண்பாட்டு வளர்ச்சி பற்றியும் தொன்மை பற்றியும் மொழியில் பற்றியும்




காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி

பல உண்மைகள் வெளிக் கொணரப்பட்டன.

(05) பல வெளிநாட்டுப் பல்கலைகழகங்களில் தமிழ் ஒரு கற்பித்தற் பாடமாக்கப்பட்டது.

(06) இப்பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்கள் தமிழ் மொழி – தமிழ் இலக்கியம் – தமிழ் வரலாறு – தமிழ் பண்பாடு போன்ற தலைப்புக்களில் ஆராய்ச்சியில் ஈடுபட வாய்ப்பு ஏற்ப்பட்டது.

(07) சமய பிரசாரத்திற்கும் வணிகப் பெருக்கத்திற்கும் அரசியல் ஆதிக்கத்திற்கும் தமிழை முன்பு கற்ற நிலை மாறி இன்று ஆராயச்சிக்காக தமிழை கற்கும் நிலை தோன்றியுள்ளது.

(08) தமிழ் மக்களின் தனி நாகரிகத்தையும், நல்வாழ்வு நெறியையும், பழம் பெருமையையும், தமிழ் மொழியின் தனிச் சிறப்பையும், ஆற்றலையும், ஏற்றத்தையும் உலகமெங்கும் பரப்பிய ஒப்புயர்வற்ற சிறப்பு தனிநாயகம் அடிகளுக்கே உரியது.

(09) தமிழியல் எனும் ஆராய்ச்சி துறையை உருவாக்கி வளர்த்து அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்தி தமிழாராய்ச்சியினை உலகளாவியதாக்கியவர்.

(10) தமிழ் இலக்கியம், மொழி பற்றிய ஆய்வு உலக அரங்கில் பெருகியது.

(11) தமிழ், மக்கள் வரலாறு, தமிழ் மக்கள் மனிதவியல், தமிழ் மக்களின் சமயங்கள், தத்துவங்கள், தமிழ் தொல்பொருளியல், தமிழ் பண்பாடு, தமிழ்கலைகள் என்று ஆராய்ச்சி விரிவடைய வழிவகுத்தார்.

(12) அயல்நாட்டு பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி ஒரு மொழிப்படையாக அமைய வழிவகுத்தார்.

(13) தமிழ் மொழியின் பெருமைகளை உலகறியச் செய்தவர் அடிகளாரே.



காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சுனாமியாக வழிவெடுத்த இயற்கையின் சீற்றம்



- செல்லத்துரை ரவீந்திரன் -

### அங்கம் - 151

எவருமே எதிர்பார்க்காத இயற்கையின் சீற்றம் 26 டிசம்பர் 2004 சுனாமி வடிவத்தில் வந்து நாடு முழுவதையும் பேரவலச்சத்திற்கு உள்ளாக்கியது.

இரண்டு பகுதியினரும் தாம் திரை மறைவில் நடத்தி வந்த யுத்த ஏற்பாடுகளும் சுனாமியின் தாக்குதல்களால் நிலை குலைந்தமையை உணர்ந்து நிவாரணப் பணிகளுக்கு முதலிடம் தரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள்.

வடக்கு கிழக்கில் சுனாமி முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த அம்பாறை பிரதேசங்களையும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முல்லைத்தீவு மாவட்டத்தையும் பெருவாரியாகப்



பாதித்தது.

இப்படியான இயற்கையின் அனர்த்தங்கள் வழமையாக சர்வதேச ஈர்ப்புக்குள்ளாகும். பாதிப்பின் தாக்கங்களை உணர்ந்த விடுதலை புலிகளும் ஸ்ரீலங்கா அரசும் நிவாரண நிதி மற்றும் உதவிகளுக்கு சர்வதேசத்தை அணுகியமை மட்டுமல்லாமல் தாங்களாகவே யுத்த முனைப்பிலிருந்து விடுபட்டு தாங்கள் வகுத்துக் கொண்ட எல்லைக்கோடுகளையும் கடந்து, மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் முடிய சில மாதங்களே இருந்தமையால் அவர் அந்தக் காலம் முடிவதற்கு முன் தான் தொடங்கிய மனிதாபிமான பணியை சமாதான புறாவாக முடித்தேன் எனக் காட்ட வேண்டும் என விரும்பினார். அதற்காகப் பல விட்டுக் கொடுப்புகளுக்கு இணங்கவும் முன் வந்தார்.

விடுதலை புலிகளுக்கும் மக்களின் நிவாரணங்களுக்காக பாரிய நிதி, தளபாடங்கள் போன்ற உதவிகள் தேவைப்பட்டமையை உணர்ந்தனர். அரசாங்கத்தின் அனுசரணையின்றி அவை தடைப்பட்டு மக்கள் மேலும் அவலங்களுக்கு தள்ளப்படும் ஆபத்துக்கள் இருந்தன. இதனை அவர்கள் விரும்பவில்லை. விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா அரசும் வடக்கு கிழக்குக்கெனத் தரப்படும் புனர்நிர்மாண நிதியை இணைந்து பயன்படுத்த சமாதான பேச்சாளர்கள் முயன்று அதில் வெற்றியும் கண்டு, இரண்டு பகுதிகளும் சுனாமிக்கு பின்னான நடைமுறைகளுக்கான கட்டமைப்பு Post - Tsunami Operation Management Structure (P - TOMS) என்ற ஒன்றை உறுதிப்படுத்தி இணைந்து நடைமுறைப்படுத்த ஜனவரி 25 இல் சம்மதங்கள் தெரிவித்தனர்.

இப்படித் தேவைகளுக்கான ஒன்றின் அடிப்படையில் இணக்கமாகச் செயல்படும் கட்டமைப்பு, முரண்பாடுகளைக் குறைத்து, காலப்போக்கில் அரசியல் தீர்வுக்கான முன்னேற்றத்தையும் அவற்றுக்கான மனப்போக்குகளையும் ஏற்படுத்தும் என சமாதான பேச்சாளர்கள் நம்பிக்கை கொண்டார்கள்.

விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் புலித்தேவன், தமிழ்ச்செல்வன் போன்றோர் அரச மட்ட பிரதிநிதிகள் லக்ஷ்மன் கதிர்காமர், ஹரீம் பீரிஸ், ராம் மாணிக்கலிங்கம் ஆகியோருடனான நேரடிப் பேச்சுக்களில், நோர்வீஜியத் தரப்பு அனுசரணையில், நகல் இணக்கங்களை ஏற்படுத்தி, அவை பிரபாகரன்,



சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் போன்றோராலும்ம் பார்வையிடப்பட்டு 22 மார்ச் 2005 இல் நகல் ஆவண வடிவில் வெளிவருகிறது. அரசாங்கம் முன்னர் சமர்ப்பித்த இடைக்கால கட்டமைப்பின் சாயலில், அரசாங்கம், விடுதலை புலிகள், முஸ்லிம்களைக் கொண்ட உயர்மட்ட குழு இன அடிப்படையில் சமநிலை கொண்டவையாக நாளாந்த நடவடிக்கைகளுக்கான தீர்மானங்களை ஏற்படுத்தி, தேவையான நிதியளிப்பை சர்வதேச வங்கி (World Bank) தனது நம்பிக்கை நிதியத்தின் மூலம் தருவதாக ஏற்பாடுகள் இருந்தன.

இரண்டு பகுதிகளிலும் அதில் ஏற்படும் கட்டமைப்பு ஒற்றுமைக்கும் பேச்சு வார்த்தைகளுக்கும் அங்கு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கட்டமைப்புகளுக்கும் தொடர்பு இல்லை என்று தெரிவித்துக் கொண்டு முன்னேறினார்கள். ஆனாலும் அந்த நிர்வாக கட்டமைப்பு இரு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், கையெழுத்திடப்படாமலேயே காலம் கடந்தது. இவை பரவணியான நாட்டு அரசியல்களின் தோரணங்களில் எழுந்தவைதான்.

குறிஞ்சி மரம் பூத்துக் குலுங்கும் காலங்களில் கூட அதன் கீழே நெருஞ்சி முள் செடியும் வளருமாம் இங்கும் நெருஞ்சிகள் வளர்ந்தன.

### நெருஞ்சி முட்கள்

முஸ்லிம் பிரதிநிதிகள் தங்களுக்கு சமாதான பேச்சுவார்த்தைகளில் இடம் தரப்படும் வரை தாங்கள் இந்தக் கட்டமைப்பை ஏற்று நடைமுறைப்படுத்தத்தயார் இல்லை என சமர்ப்பணங்கள் தங்கமையால், அவை பற்றி முஸ்லிம் மக்களோடு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டது.

பேரினவாதத்தின் ஊற்றான பௌத்த மத சங்கங்கள் வடக்கு, கிழக்கு பகுதியின் அதிகாரத்தை விடுதலைப் புலிகளிடம் கையளிக்க இந்த கட்டமைப்பின் மூலம் ஏற்பாடுகள் நடக்கின்றன என பிரச்சாரங்கள் மேற்கொள்ள, இதில் பொதிந் துள்ள மனிதாபிமான தன்மையை நேரடியாகவே மக்களுக்கு விளக்குவதற்காக ஜனாதிபதி சந்திரிக்கா தென்பகுதியில் பல பௌத்த விகாரங்களிலும் மடாலயங்களிலும் விளக்க கூட்டங்கள் ஏற்படுத்தி, பல்லின மொழித் தலைவர்களையும் இணைத்து, கூட்டங்கள் நடத்தி, அரசாங்க ஊடகங்கள் மூலம் இவற்றிற்கு எதிராக வரும் பிரச்சாரங்களை கட்டுப்படுத்தினார்.

தூக்கி எறிந்து விட்டாலும் நெருஞ்சி முள் இன்னுமொரு காலை பதம் பார்க்காமல் இருப்பதில்லை. பௌத்த சாசனங்கள் தங்களது எதிர்ப்பை நாடாளுமன்றத்தில் தேசியவாதிகளுக்கும் பேரினவாதிகளுக்கும் எடுத்துச் சென்று இப்படியான ஏற்பாடுகளால் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் தனது ஜனாதிபதிப் பதவிக்காலம் முடிந்த பின் இன்னொரு விதத்தில் சந்திரிகா அரசியலில் தொடர ஆயத்தங்கள் செய்கிறார் என பிரசாரங்கள் தொடந்தன.

ஜனாதிபதிசந்திரிகாவுக்குஅவரதுகட்சிக்குள்ளேயே வெளிப்படும் எதிர்ப்புகள் தொடர்பில் நோர்வே மத்தியஸ்தர்கள் ஆதங்கங்கள் கொண்டாலும், அவற்றைத் தான் சமாளித்துக் கொள்வேன் என்ற ஆணித்தரமான பேச்சுக்களை கண்டியில் 2005 மே 15 நடந்த சர்வதேச நிதி உதவியாளர் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவித்து, எந்த எதிர்ப்பின் இடையிலும் தான் இடைக்கால கட்டமைப்பே நிறுவுவேன் என வாக்குறுதி அளித்து 24 ஜூன் 2005 இல் அது இரு பகுதியினராலும் கைச்சாத்து இடப்பட்டது.

அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பி. வெளியேறி பேரினவாதத்தின் பிதாமகர்களாக அரசில் இயங்கிக் கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷ தரப்புகளுடன் சேர்ந்து செயற்பட்டது. ஜனாதிபதியின் கட்டமைப்பு நாட்டின் இறைமையை பலவீனமாக்குவதாக மஹிந்தவோடு உறவாடிய மற்ற பேரினவாதிகளும் குரல் எழுப்பினர்.

இவை நடந்து கொண்டு வர விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சர்வதேச பயணங்களைத் தங்களது புலம்பெயர் அமைப்புக்களுடன் மந்திராலோசனைகளுக்காக நடத்த, மறுபுறத்தில் ஜாதிக ஹெலஉறுமய சுனாமி சம்பந்தப்பட்ட கட்டமைப்பு அரசமைப்புச் சட்டத்திற்கு புறம்பானது என நீதிமன்றத்திற்கு சென்று அதில் வெற்றியும் பெற்றது.

இந்திய ஒப்பந்தத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட 19ஆம் திருத்தத்தின் விதிகள் அதிகாரப்பகிர்வ்சியே ஏற்படுத்துகின்றன எனவும், அவை அரமைப்புச்சட்டங்களுக்கு முரணானவை அல்ல எனவும் உயர்நீதிமன்றம் முன்னர் தீர்ப்பளித்து இருந்தது.

இப்பொழுது அரசின் அதிகார மாற்றங்களால் அந்த நிர்வாகத்தின் அதிகாரக் கையளிப்பு முரணானதென இன்னும் ஓர் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால் நீதிமன்றங்களில் நிர்வாகங்களில் சமா



தான பேச்சாளர்களுக்கு எந்த அதிகாரமும் இருக்கவில்லை. நீதிமன்றம் இரு பகுதிகளையும் கட்டுப்படுத்தியது.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழினத்தின் தலைவிதியை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சுபீட்சமான நாட்டுக்கான பாதை நல்லிணக்கமே' எனும் தலைப்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் தமிழ் மக்களின் சுயநிர்ணயம், சர்வதேசநீதிவிசாரணை என்பனவற்றை வலியுறுத்தி உரையாற்றிய வேலன் சுவாமிகள், மேலும் தெரிவித்ததாவது:-

1505 ஆம் ஆண்டு இலங்கைத் தீவு யாழ்ப்பாண இராசதானி, கண்டி இராசதானி, கோட்டை இராசதானி என மூன்று இராசதானிகளாக ஆளப்பட்டு கொண்டிருந்தது. தற்போதைய வடக்கு, கிழக்கு, வடமேற்கு மாகாணங்கள் உள்ளடங்கலான பெருவாரியான தமிழர் வாழ் நிலப்பரப்பு யாழ்ப்பாண இராசதானியின் ஆளுகையின் கீழ் இருந்தது. தமிழினம் தம்மை தாமே ஆளும், தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் இனமாக வேயே வாழ்ந்து வந்தது.

போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்பின் போதும், தமிழர் தாயகம் தனி நிர்வாக அலகாகவே பரிபாலிக்கப்பட்டது. ஆங்கிலேயர் முழுத்தீவையும் ஆக்கிரமித்த போதுதான், தமிழரின் அரசு சிங்கள அரசுகளுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அலகாக மாற்றினர். அதன் பின்னர் இத்தீவை விட்டு வெளியேறும் போதும் எமது இறைமையையும் சேர்த்து சிங்கள அதிகாரத்திடமே கையளித்து சென்றனர். பறங்கியரிடமும் ஆங்கிலேயர்களிடமும் இழந்த எமது இறைமையானது எமது விருப்பம் அறியப்படாமலேயே சிங்கள தேசத்திடம் அடகு வைக்கப்பட்டது.

1948ஆம் ஆண்டு தொடக்கம் அதிகாரத்தை பகிர்ந்து சமத்துவமாக ஒன்றிணைந்து வாழ நாம் எடுத்த முயற்சிகள் அனைத்தும் சிங்கள பேரினவாதத்தின் கொடுங்கரங்களால் அடக்கப்பட்டது. எம்மால் முன்வைக்கப்பட்ட சமஷ்டி கோரிக்கை புறக்கணிப்பட்டது.

சிங்களத் தலைவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் உட்பட பல்வேறு ஒப்பந்தங்களும் கிழித்து எறியப்பட்டன. சாத்வீகமான சத்தியாகிரகங்கள் தடியடிகளாலும், பொலிஸாரின் கொடூர தாக்குதல்களாலும் ஒடுக்கப்பட்டன. அதே சமயத்தில் 1956 இல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தினால் எமது மொழி உரிமையை பறித்ததுடன், அதேகால பகுதியில் கொண்டுவரப்பட்ட கல்லோயா திட்டத்தினூடாக எமது நிலங்களை பறிப்பதற்கான திட்டம் முடுக்கி விடப்பட்டது.

1971 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் சட்டத்தினூடாக எமது கல்வி உரிமையும் பறிக்கப்பட்டது. இவ்வாறான தொடரான அடக்குமுறையை எதிர்கொண்ட நாம் நீண்ட நெடிய அரசியல் போராட்டத்தின் பின், எவ்வித தீர்வையும் சிங்களத்தேசத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்பதை உணர்ந்த எமது அரசியல் தலைவர்கள் 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானத்தினூடாக எமக்கான சுதந்திர தேசத்தினை முன்மொழிந்தார்கள்.

முன்மொழிவை 1977ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலைச் சர்வஜன வாக்கெடுப்பாகப் பாவித்து தமிழ் மக்கள் சுதந்திர தேசத்திற்கான ஏகோபித்த ஆணையை வழங்கியிருந்தனர். அப்போதே தமிழ் மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து, மனப்பூர்வமாக பிரிந்திருந்தால் இன்று இந்தத் தீவில் தெற்காசியாவிலேயே மிக வளம் மிக்க இரு நாடுகள் இருந்திருக்கும். ஆனால், சிங்கள ஆதிக்க மனப்பான்மை அதற்கு இடம் கொடாது தமிழினத்தைத் தொடர்ந்து ஒடுக்குவதிலேயே குறியாக இருந்தது.

1956, 1977 என்று தொடராக தமிழ் மக்களின் மீது ஏவி விடப்பட்ட இனவன்முறை 1983 இல் எமது இனத்தின் மீது கோரத்தாண்டவம் ஆடியது. தமிழின அழிப்பையே ஒரே நோக்கமாக கொண்டு நன்கு திட்டமிட்டே இவ் இனவன்முறைகள் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன.

இவ்வாறு தொடராக அடக்குமுறைக்கு உள்ளான நாம், எமது இனத்தை காக்க, பாதுகாப்பு வேலியினை நாமே உருவாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம். இதன் மூலமாகவேதான் நாம் எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடிந்தது. எமது இறைமையை மீட்டெடுக்க முடிந்தது. எமது மொழியை, எமது கலாசாரங்களை, எமது நிலங்களை பாதுகாக்க முடிந்தது. ஆனால் அதனை பொறுத்துக்கொள்ள முடியாத சிங்கள அதிகார வர்க்கம், சர்வதேச மத்தியத்துடன் நாம் முன்வைத்த சமாதான முன்னெடுப்பை கிழித்தெறிந்து, எமது விடுதலை பயணத்தைப் பயங்கரவாதமாக உலகெங்கும் சித்தரித்து, 30 இற்கும் மேற்பட்ட நாடுகளின் துணைகொண்டு அழித்தது.

2009 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தின் மூலம் கடைசி ஆறுமாதத்தில் மட்டும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எமது உறவுகள் கொல்லப்பட்டதை ஐ.நா. பொதுச்செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக்குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இதில் 29 இற்கும் மேற்பட்ட கைக்குழந்தைகள் சிறுவர்களும் அடங்குவர். தமிழினத்தின் பெருமளவிலான உயிர் அழிவு, சொத்தழிவின் பின்னரும் தமிழினம் தொடர்ந்தும் அடிமைப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

எமது மரபுவழி தாயகத்தை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதுடன், நாம் ஒரு திறந்த வெளி சிறைச் சாலையிலேயே வாழ்ந்து வருகின்றோம். நாம் ஓர் இயல்பான வாழ்க்கை வாழ்வதற்கோ, எமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கோ வழியின்றி தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றோம். எமது மரபுவழி தாயக நிலம் தொடர்ச்சியான சிங்கள பௌத்த மயமாக்கப்பட்டு எமது நிலங்கள் தொடர்ச்சியாகவே அபகரிக்கப்பட்டு வருகின்றன.

பௌத்தர்களே இல்லாத எங்களின் தாயகம் எங்கும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை மாற்றியமைக்க கடுமையான முனைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொல்லியல் திணைக்களம் எனும் போர்வையில் எமது பாரம்பரிய சைவ ஆலயங்களான குறுந்தூர்மலை, வெடுக்குநாறி மலை உள்ளிட்ட 200 க்கும் மேற்பட்ட ஆலயங்களை பௌத்த விகாரைகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக நடக்கின்றன.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்பட்டு 13 ஆண்டுகள் கடந்த பின்பும் பெருமளவிலான இராணுவம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கின்றது. 13 ஆண்டுகள் கடந்த பின்னும் இராணுவத்திடம் கையளித்து விட்டு தமது உறவுகளை தேடிக்கொண்டிருக்கும் தமிழர்களுக்கு எவ்வித பதில்களுமின்றி காலங்கள் கடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. சிறைகளில் அரசியல் கைதிகளாக வாடும் எமது உறவுகள் ஒவ்வொரு நாளும் தமது வாழ்க்கையை கரைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறாக தமிழர்களின் வாழ்வதற்கான அடிப்படை உரிமையைக்கூட பறிப்பதில் தீவிரமாக உள்ள சிங்களதேசம் எவ்வாறு சுபீட்சமான தேசத்திக்கான நல்லிணக்க பாதையை கண்டறிய முடியும். தமிழினத்தை சிங்கள மேலாதிக்க சிந்தனையில் அழித்துவிட துடிக்கும் போது இவ்வாறாக எம்மால் கூடி வாழ முடியும்? இவ்வளவு நாளும் போரில் தமிழரை வென்று விட்டோம் என வெற்றி விழா கொண்டாடிய நீங்கள் இன்று தெற்கில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியாலேயே தமிழர்களை தேடி வந்துள்ளீர்கள்.

இந்தப் போலியான நல்லிணக்க முயற்சியை தமிழ் மக்களாகிய நாம் நம்பவில்லை. அதனைப் பதிவு செய்யவே இன்று இக்கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளேன். 70 வருடங்களுக்கும் மேலான எமது அரசியல் பட்டறிவில் நாம் கண்டு கொண்ட பாடம். முயற்சிகளுக்கு முன்பு, தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

எமது தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள இராணுவம் அகற்றப்பட வேண்டும். எமது நிலங்களை கையகப்படுத்தும், சிங்கள பௌத்தமயமாக்கல் நிறுத்தப்பட்டு காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகளாக சிறையில் வாடும் எமது உறவுகள் உடனடியாக எவ்வித நிபந்தனைகளுமின்றி விடுதலை செய்யப்படவேண்டும். சிங்கள தேசத்தின் நீதி பொறிமுறையில் நாம் முழுமையாக நம்பிக்கை இழந்து விட்டோம். காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட எமது உறவுகளுக்காக சர்வதேச நீதியை நாடி நிற்கின்றோம். அதற்கு உதவாவிட்டாலும் இடையூறு செய்யாமல் இருங்கள்.

சர்வதேசத்தால் நடத்தி கண்காணிக்கப்படும் சர்வஜன வாக்கெடுப்பினூடாக வடக்கு, கிழக்கைப் பூர்வீகமாகக் கொண்ட எமது மக்கள் தமது அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் வழிவிடுங்கள். இதன் மூலமே இந்த இலங்கை தீவில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த முடியும். இதனை வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் சார்பாக, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி ஊடாக மக்கள் வழங்கிய ஆணையின் வழியாக இவ்விடத்தில் அறுதியிட்டுக் கூற விரும்புகின்றேன். இதனைத் தாண்டி இந்தத் தீவில் அமைதியை ஏற்படுத்த வேறு எந்த மார்க்கமும் இல்லை.

இன்று இவ்விடத்தில் எம் மக்களின் உரிமை குரலை வெளிப்படுத்துவதற்காக நாளை நானும் கூட விசாரிக்கப்படலாம், அச்சுறுத்தப்படலாம், ஏன் உயிர் ஆபத்தை கூட எதிர்கொள்ளலாம். ஆனாலும், எமது உரிமைக் குரலை அடக்க முடியாது. ஆண்ட இனம் நாம். எமது ஆட்சி உரிமையை யாரும் பறிக்க முடியாது - என்றார்.

## காணாமல் போனோர் ......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடிக்குள் சிக்குண்டு கிடக்கும் அரசு எவ்வாறு இரண்டு லட்சத்தை வழங்கப்போகின்றதுஎன்றகோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

பிரதேச செயலகத்தின் உள்வாயில் மூடப்பட்டிருந்த நிலையில் பிரதான வாயிலை மூடி விசாரணை மேற்கொள்வதைத் தடுக்கும் விதமாக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதையடுத்து மடக்களப்பு பிரதான் பொலிஸ் நிலைய பொலிஸார் அந்த இடத்துக்கு வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை ஓரப்படுத்த முற்பட்ட வேளை அங்கு வாக்குவாதம் இடம்பெற்றது.

பின்னர் பொலிஸார் விசாரணை நடாத்தப்படும் மண்டபத்தினுள் சென்று விசாரணை அதிகாரிகள் சிலரை அழைத்து வந்து போராட்டம் மேற்கொள்வோருடன் கலந்துரையாட வைத்தனர்.

இந்த விசாரணையில் நம்பிக்கை இல்லை, அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டாம், இந்த விசாரணையை உடன் நிறுத்த வேண்டும் என்ற பலமான கோரிக்கையை போராட்டக்காரர்கள் முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள், விசாரணையை இடைநிறுத்தி அங்கிருந்து சென்றனர்.

## மாங்குளத்தில் 2 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிய ளவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலே யானைகளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தினால் ரயில் சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் சேவைக்குத் திரும்பியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸாரும், வனஜீவராசிகள் திணைக்களமும் தனித்தனியான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தொடரும் சீரற்ற .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளம் மற்றும் மண்சரிவால் மூவர் பலியாகியுள்ளனர். இருவர் காணாமல் போயுள்ளனர். 5 வீடுகள் முழுமையாகவும் 178 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

275 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. நான்கு பாதுகாப்பான இடங்களில் ஆயிரத்து 146 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## மழையால் மூவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளனர். மூவர் உயிரிழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

## 1,000 போதை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிசெய்து போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதே நேரம் இவர்களிடம் மில்லிக் கிராம் அளவு ஹெரோயினும் காணப்பட்டுள்ளது.

## வவுனியாவில் பஸ் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இருந்து மாலை 5.30 இற்கு மன்னார் நோக்கிப் புறப்பட்ட இ.போ.ச. பஸ் பயணிகளை ஏற்றுவதற்காக வவுனியா வைத்தியசாலைசுற்றுவட்ட வீதியூடாககுடியிருப்பு நோக்கிச் சென்ற போது, வைத்தியசாலை வீதியில் இருந்து குடியிருப்பு நோக்கித் திரும்பிய சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் சைக்கிளில் பயணித்த வயோதிபர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

வவுனியா, வெளிக்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா தவராசா (வயது 65) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்தையடுத்து இ.போ.ச. சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்துப்பொலிஸார்மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வேப்பங்குளத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பிய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா, வேப்பங்குளம், 7 ஆம் ஒழுங்கையில் அதி உயர் மின்னழுத்த மின்கம்பங்கள் நிறுவும் நடவடிக்கை மின்சார சபையால் முன்னெடுக்கப்பட்டது. மூன்று புதிய மின்கம்பங்களை புதிதாக நிறுவி அவற்றின் ல் ஊடாக மின் இணைப்பு வயர்களை இழுத்துக் கொண்டிருந்த போது மின்கம்பம் ஒன்று உடைந்து விழுந்துள்ளது.

மின்கம்பம் உடைந்து விழுந்த போது அந்தக் கம்பத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஊழியர் உயர் அழுத்த மின் கம்பத்தின் அருகில் இருந்த உயரக் கட்டிடத்தில் குதித்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இதேவேளை, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குறித்த மின்கம்பம் சரியான முறையில் கம்பிகள் உள்ளீடு செய்து தரமானதாக அமைக்கப்படாமையே அது உடைந்து விழுந்தமைக்கு காரணம் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இதனால் புதிதாக நிறுவப்பட்டுள்ள உயர் அழுத்த மின்கம்பங்கள் தொடர்பில் தாம் அச்சத்துடனேயே வாழ வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622

## மிக மோசமான .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை என்ன நடக்கும், அடுத்த மாதம் என்ன நடக்கும், ஜனவரி என்ன நடக்கும் என ஒவ்வொரு பொருளாதார நிபுணர்களும் ஒவ்வொரு வகையான கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

உலக நாடுகளில் எமது நாடு இன்று கறுப்பு மை பூசப்பட்டது போல் ஒரு வித்தியாசமான தாழ்ந்த பார்வையோடு பார்க்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அனைத்து வளங்களையும் கொண்டிருக்கும் நாடே எமது நாடு. கல்வியில் கூட தென்னாசியாவில் உயர்ந்த நிலையில் இருந்த எமது நாட்டை மிகவும் மோசமான ஆட்சியாளர்கள் துர்ப்பாக்கிய நிலைக்கும், கையேந்துகின்ற நிலைக்கும் கொண்டு வந்து விட்டார்கள்.

எல்லோரும் இன்று கடனாளிகளாக, ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியில்லாதவர்களாக வாழுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் பரிதாபகரமான நிலையில் இருக்கின்றனர் என்று செய்திகள் மூலம் அறியமுடிகின்றது.

இவ்வாறான நிலையில் புதிய ஜனாதிபதி உணவு உற்பத்திக்காக எல்லோரும் தயாராகுங்கள் என அடிக்கடி பேசி வருவதை நாங்கள் காண்கின்றோம். திருகோணமலையில் பேசுகின்ற போது கூட அவ்வாறுபேசியுள்ளார். அம்பாறையிலும் பேசியுள்ளார்.

எமது மக்களைப் பொறுத்தவரை விவசாயம் செய்ய ஆசைப்படுகின்றார்கள். விவசாயம் செய்ய வளம் இருக்கின்றது. மண் வளம் இருக்கின்றது.

இலங்கையில் 40 வீத உழுந்து உற்பத்தியை வவுனியா மாவட்டம் ஒரு காலத்தில் வழங்கியது. இன்று உழுந்து தேவையைபூர்த்திசெய்யமுடியாதுள்ளது. வனவளத் திணைக்களத்தால் போடப்படுகின்ற தடை அதனைப் பாதித்துள்ளது.

மூதாதையர் செய்த நிலங்கள், யுத்தத்தால் சில காலம் கைவிடப்பட்டிருந்த நிலங்கள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு விவசாயம் செய்ய முடியாத வகையில் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. டீசல் பிரச்சினை, யூரியா பிரச்சினை, வனவளத் திணைக்களத்தின் பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

வனவளத் திணைக்களத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க கடந்த காலங்களில் பல முயற்சிகளைச் செய்தோம். சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும், பல பிரச்சினைகள் தீர்க்கப்படாது தேங்கிக் கிடக்கின்றன. தேக்கு மரத்தைக் குளத்துக்குள் நடுகின்றார்கள். அவ்வாறான பிழையான நடைமுறைகளுக்கு எங்களது அரச அதிகாரிகளும் ஒத்துப் போகின்றார்கள்.

அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் மக்களுடன் சேர்ந்து நின்றால் மட்டும் தான் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். தென்னிலங்கையில் இவ்வாறான பிரச்சினைகள் கிடையாது. வடக்கு, கிழக்கு பகுதிகளில்தான் இவ்வாறான பெரிய அநியாயம் போருக்குப் பின்னர் தொடர்ச்சியாக நடந்து வருகின்றது. எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்தால் தற்போது வந்துள்ள ஜனாதிபதியோடு நாங்கள் எல்லோரும் இணைந்து பேச முடியும்.

நாட்டில் பஞ்சத்தைப் போக்க விவசாயம் செய்யுமாறு சொல்லுகின்ற போது எமக்கு நடத்திருக்கின்ற இந்த அநியாயத்துக்கு நீங்கள்தான் நியாயம் தாருங்கள். அதன் மூலம்தான் நாட்டில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தைத் தீர்க்க எமது மக்களும் பங்களிப்புச்செய்ய முடியும்எனச்சொல்வோம். இதன் மூலம் எமது மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும் - என்றார்.

## பணவீக்கம் செப்ரெம்பரில் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்று உள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் கண்டி வீதி, கொடிகாமத்தைச்சேர்ந்த கந்தக்குட்டி சுந்தரம் (வயது - 67) என்பவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி தபால் ரயில் சென்ற போது விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம்பொலிஸார்மேற்கொண்டுள்ளனர்.

## கட்சி அரசியலைப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறை தொடர்பில் அம்பாறை மாவட்டத்திற்கான அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதுவரை நாம் மிகவும் கடினமான காலகட்டத்தை எதிர்கொண்டிருந்தாலும் எவரும் பட்டினியால் வாட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இந்தச் செயற்றிட்டத்தை வெற்றிகொள்வதன் மூலம் உலக உணவு நெருக்கடிக்கு முகங்கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதே வேளை அடுத்த வருடம் முதல் விவசாயம் நவீனமயப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுப்படுத்துவதற்கான பலதரப்பு கூட்டுப் பொறிமுறையை அமுல்படுத்துவது, அம்பாறை மாவட்டத்தை அபிவிருத்தியடைந்த சமூகத்துடன் வளமான மாவட்டமாக மாற்றுவது என்பனமூலம்உணவுப்பாதுகாப்பையும் போக்கையும் உறுதிப்படுத்துவது குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் நெல் உற்பத்தியில் 22 வீதம் அம்பாறை மாவட்ட விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுவதுடன், எதிர்வரும் போகங்களில் வெற்றிகரமான அறுவடையை முன்னெடுப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட அரச அதிகாரிகளிடம் களப் பணியில் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் மற்றும் சிரமங்கள் தொடர்பில் ஜனாதிபதி நேரடியாகக் கேட்டறிந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் விவசாய மற்றும் கடற்றொழில் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அவற்றைச் செவிமடுத்த ஜனாதிபதி, அவை தொடர்பில் ஆராய்ந்து உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக விசேட குழுவொன்றை நியமிக்குமாறும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், ஹார்ஷ டி பண்ணை வளாகத்தை பார்வையிட்ட ஜனாதிபதி, பண்ணை வளாகத்தில் மரக்கன்று ஒன்றையும் நட்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:-

இரண்டாம் உலகப் போரின் போது உணவைப் பெற முடியாத நிலை இருந்த போதிலும் பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை. ஆனால், தற்போது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இப்போது பொருளாதாரத்தை கடந்த வருடத்தைவிடவும் ஓரளவு மீட்டுள்ளோம். இன்னும் பிரச்சினைகள் இருக்கின்றன. ஒருபக்கம் பணத்தை நாம் அச்சிட்டால் பணவீக்கம் அதிகரிக்கும். கையிருப்பில் உள்ள பணத்துடன் பணிகளை முன்னெடுத்தால் வரையறைகள் ஏற்படுகின்றன.

எவ்வாறாயினும், இந்தப் பிரச்சினையில் இருந்து மீண்டு, முன்நோக்கிச் செல்ல நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம். எனவே இங்கு விவசாயத்தை மட்டும் நான் பார்க்கவில்லை. முழுமையான செயற்றிட்டம் குறித்து பார்க்க வேண்டியுள்ளது. தற்போது உங்களின் பிரதேசங்களில் பயிர்ச் செய்கையை ஆரம்பியுங்கள்.

எமக்கு என்ன உணவு வகைகள் மேலதிகமாக தேவைப்படுகின்றன என்பது குறித்து எமது உணவுப் பாதுகாப்பு செயலணி மூலம் அறிவிக்கப்படும். நெல் பயிர்ச் செய்கை குறித்து பிரச்சினை இருக்காது.

இந்த நிலைமை தொடர்ந்தால் எமக்கு கையிருப்பு இருக்கும். எனினும், சோளம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். முடிந்த இடங்களில் அந்தப் பயிர்ச் செய்கையை அதிகரிக்க வேண்டும்.

எனவே, உங்களின் பிரதேசங்களிலும் இதனைச் செய்ய வேண்டும். கிராமப் புறத்தில் உள்ள அனைத்து அதிகாரிகளையும் இந்த செயல் திட்டத்தில் இணைத்துக் கொண்டுள்ளோம். அனைவரும் இதற்காக பணியாற்ற வேண்டும்.

முழு மாவட்டத்திலும் இதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும். அடுத்ததாக போக்குக் குறைபாட்டில் உள்ளவர்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு உணவைப் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டமொன்று வேண்டும்.

இதற்கான உணவு வங்கிகள், உணவுகளைப் பகிர்ந்தளிக்கும் சமூக சமையலறைகள் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். இந்தச் செயற்றிட்டங்களுக்கு அரசு முடிந்தளவு உதவிகளை வழங்கும்.

இந்தக் காலகட்டம் மிகவும் நெருக்கடியானது. எவரையும் பட்டினியில் இருக்க நாம்இடமளிக்கக்கூடாது. நாம்முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். ஆனால், பெரும்போகத்தின் விளைச்சல் கிடைத்த பின்னர் இந்த நிலைமையில் முன்னேற்றம் இருக்கும்.

எனினும், 2023ஆம் ஆண்டு இறுதி வரை நாம் இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்க வேண்டும். எமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தாலும் உலக உணவுப் பற்றாக்குறை இருக்கும் என்பதால் எமது நாட்டில் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அதன் பின்னரும் நாம் இந்தப் பொறிமுறையை நிறுத்தமாட்டோம்.

இதன் தொடர்ச்சியாக விவசாயத்தை நவீனமயப்படுத்த வேண்டும். எனவே தான் நாம் புதிய செயற்றிட்டமொன்றை முன்னெடுத்துள்ளோம். இந்தப் பணியில் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம். இந்தப் பணிகளின் போது எமக்கு கட்சி அரசியல் இருக்காது. கட்சி அரசியலை நாம் புறந்தள்ள வேண்டும்.

மக்களின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும் அரசியலுக்கு நாம் செல்ல வேண்டும். சம்பிரதாய அரசியலில் எந்தப் பயனும் இல்லை. தற்போதிருந்து அடுத்த ஏப்ரல் மாதம் வரை நாம் உற்பத்திகளை முன்னெடுக்க வேண்டும்.

விசேடமாக பெரும்போகத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும். இதற்கு ஒத்ததாக நாட்டின் 75ஆவது சுதந்திர தின விழா வருகிறது. விசேடமாக சுதந்திரம் கிடைத்த பின்னர் டி.எஸ்.சேனாநாயக்கவினால் முதல்முறையாக ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா நீர்ப்பாசன செயற்திட்டம் அம்பாறை மாவட்டத்திலேயே இருக்கிறது.

இந்தச் செயற்றிட்டத்துக்கு யாரிடமும் கடன் வாங்கவும் இல்லை, உதவி வாங்கவும் இல்லை. இங்கிலாந்துக்குக் கடன் வழங்கிவிட்டு, மீதமிருந்த பணத்தில் கல்லோயா திட்டத்தை முன்னெடுத்தோம். இதனை முன்னுதாரணமாகக் கொண்டு அம்பாறை மாவட்டம், நாட்டுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்யும் என நம்புகிறேன்.

அரசியல் பேதங்கள் இன்றி அனைவரும் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்க வேண்டும். விவசாய அமைச்சரும், பிரதமரும் இந்தப் பிரதேசத்துக்கு வந்து, இந்தச் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்து பார்ப்பார்கள். எனவே, அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் பணியை முன்னெடுப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

நாம் தற்போது எதிர்கொண்டிருக்கும் இந்த சவால்களை இதற்கு முன்னர் நாம் எப்போதுமே எதிர்கொண்டதில்லை. எமது பெற்றோர், மூதாதையர் கூட இவ்வாறான சவால்களை எதிர்கொள்ளவில்லை. இது எமக்கு புதிய சவால். நாம் சரியாக செயல்பட்டால், இதில் வெற்றியடைந்து இன்னும் பலம் பெறுவோம். எனவே, அடுத்த வருடத்தில், இந்த அடிப்படை பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள நாம் பணியாற்றுவோம் என்றும், இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி. வீரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, எச்.எம்.எம். ஹாரிஸ், பைசல் காசிம், டொக்டர். திலக் ராஜபக்ச, என்.எம்.எம். முஷாரப், டி. கலை அரசன், சரத் வீரசேகர, ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் முன்னாள் அமைச்சர் தயா கமகே, முன்னாள் இராஜாங்க அமைச்சர் அனோமா கமகே, தேசிய உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட மற்றும் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், அம்பாறை மாவட்டச் செயலாளர், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண சபை தலைவர் மற்றும் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாயம், நீர்ப்பாசனம், சமுர்த்தி ஆகியவற்றுடன் தொடர்புடைய அரச அதிகாரிகள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# உமாமகேஸ்வரனுக்கு பாராட்டும் கௌரவமும்!

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் கடந்த 8 வருட காலம் பணிப்பாளராக கடமையாற்றிய அ.உமாமகேஸ்வரன் வடமாகாண சபைக்கு விசேட தர பதவி ஒன்றுக்கு பதவியுயர்வு பெற்றுச்செல்லும் நிலையில், அவருக்குக் கடந்த 5 ஆம் திகதி திணைக்களத்தினால் உதவிப்பணிப்பாளர் நிமலினி கிறிஸ்ரிரூபன் தலைமையில் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு நிகழ்வில் திணைக்களத்தின் சார்பில் நினைவுச் சின்னம் வழங்கப் பட்டது.

நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்ட கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை தில்லை நடராஜா, புனர் வாழ்வு அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி சாந்தி நாவுக் கரசன், கணக்காளர் திருமதி வி.டிரோஷனா, உதவிப்பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன், பிரதம கணக்காய்வாளர் ஜி.காண்டீபன், கலாநிதி க.இரகுபரன், பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் மற்றும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.







# சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வகமும் இணைந்து நடத்திய வெள்ளை பிரம்பு தினம்

சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வக சமூகமும் இணைந்து நடத்திய சர்வதேச வெள் ளைப் பிரம்புதின விழிப்புணர்வுப் பேரணி நேற்று (சனிக்கிழமை) காலை 8.30 மணிக்கு சுன்னாகம் கொமர்ஷியல் வங்கிக்கு முன்பாக ஆரம்பமாககியது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.டினேஷ், விழிப்புலனற்றோர் இல்லமாகிய வாழ்வகத்தின் தலைவரும் கோப்பாய் கல்வி யியற்கல்லூரி விரிவுரையாளருமாகிய ஆ.ரவீந் திரன் ஆகியோர் தலைமையில் இந்த விழிப் புணர்வுப் பேரணி ஒழுங்குசெய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் தலை மைத்துவ பிரதி இணைப்பாளர் லயன் மகா லிங்கம் மயூரதன் பிரதம விருந்தினராகவும் ஈ. – சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் நிர்வாகி யும் கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தின் அதிபருமாகிய லயன் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீ வன் சிறப்புவிருந்தினராகவும் கலந்து பேர ணியை ஆரம்பித்து வைத்தார்கள்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் உத்தியோ கத்தர் பார்வைக் குறைபாடுடைய மாணவர்க ளுக்கு வெள்ளைப் பிரம்புகளை வழங்கிவைத் தார்.

இந்தப் பேரணி சுன்னாகம் கொமர்ஷியல் வங்கிக்கு முன்பாக ஆரம்பமாகி, சுன்னாகம் பஸ் தரிப்பு நிலையத்தைச் சென்றடைந்து அங்கு வாழ்வகத் தலைவரின் வெள்ளைப் பிரம்பு தொடர்பான விழிப்புணர்வு உரை இடம் பெற்று, பின் பேரணி மீண்டும் சுன்னாகத் தைச் சென்றடைந்து காங்கேசன்துறை வீதி வழியாக வாழ்வகத்தைச் சென்றடைந்தது.

வாழ்வக அன்னை சின்னத்தம்பி அன்ன லட்சுமி அம்மையாரின் சமாதியில் வழிபாடு கள் இயற்றப்பட்டு, தொடர்ந்து வாழ்வகக் கேட்போர் கூடத்தில் விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.




# 'சுபீட்சமான நாட்டிற்கான பாதை நல்லிணக்கமே' எனும் தொனிப்பொருளில் யாழில் கலந்துரையாடல்!

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மற்றும் இன மத நல்லிணக்கத்துக்கான கூட்டமைப் பின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்துக்கான மக் கள் கலந்துரையாடல் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

'சுபீட்சமான நாட்டுக்கான பாதை நல்லி ணக்கமே' எனும் தொனிப்பொரு ளில் யாழிலுள்ள தனியார் விருந் தினர் விடுதியில் இந்தக் கலந்து ரையாடல் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் சமூக நீதிக்கான தேசிய இயக்கத் தலைவர் கரு ஜயசூரிய, கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந் திரன், த.சித்தார்த்தன், நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர்க ளான மாவை சேனாதிராஜா, விஜ யகலா மகேஸ்வரன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் எனப் பல ரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை ஜனநாயகத்தையும் மக்க ளுக்கான நீதியையும் உறுதிப்படுத்தும் நோக் கில் மேற்படி சிவில் சமூக அமைப்பு செயற் பட்டுவருகின்றமை இங்கு குறிப் பிடத்தக்க தாகும்.



# ஜனாதிபதி ரணிலின் எண்ணம் ஒருபோதும் கைகூடாதாம்!

**அடித்துக்கூறுகிறார் கே.டி. லால்காந்த**

அடக்குமுறையைக் கையாள் வதன் ஊடாக அரசியல் மற்றும் சமூக ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்த முடியும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணம் ஒரு போதும் கைகூடாது என்று ஜே.வி. பியின் அரசியல் குழு உறுப்பின ரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

நுவரெலியா – மஸ்கெலியா தேர்தல் தொகுதியின் மக்கள் சந் திப்பு கூட்டம் நேற்று (சனிக்கிழமை) ஹற்றனில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகை யில் –

தற்போதைய ஆட்சியாளர்களால் இந்நாட்டை ஆள முடியவில்லை. அதனால்தான் மக்கள்மீது வரிச் சுமை திணிக்கப்படுகின்றதோடு ஒரிரு நாள்களுக்கு முன்னர்கூட புதிய வரி அறிமுகப்படுத்தப்பட்டது எனத் தெரிவித்த அவர் இது ஆரம் பம் மட்டும்தான் அடுத்து வரும் நாள் களில் புதிய புதிய வரிகள் வரலாம் எனவும் அவர் தெரிவித்தார்.



அதேவேளை மக்கள் எழுச் சியை அடக்குமுறை ஊடாகக் கட்டுப் படுத்தி ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்தி விடலாம் என ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க கருதுகின்றார். ஆனால் அந்த முயற்சி வெற்றியளிக்காது என்பதோடு ஜனநாயக வழியில் நாம் பதிலலொன்றை எதிர்பார்க் கின்றோம். அதற்கான சிறந்த வழி தேர்தலாகும் என்றும் குறிப்பிட் டுள்ளார்.

# மன்னாரில் இந்திய தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் கடலட்டை பண்ணை நிலையங்கள் அமைக்கும் நடவடிக்கை!

மன்னார், ஒக். 17

இந்திய தனியார் முதலீட்டாளர் களின் பங்களிப்புடன் கடலட்டை பண்ணைகளுக்கு தேவையான கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலை யங்கள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை மன்னாரில் இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மன்னார், ஓலைத் தொடுவாய் பகுதியில் அமைந்துள்ள நக்டா நிறுவனத்தால் செயற்படுத் தப்படுகின்ற கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்று இருந் தது.

மேலும் இந்தக் கலந்துரையா டலில், கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையம் மற்றும் குஞ்சு பராமரிக்கும் நிலையம் போன்றவற்றுக்கான இந் திய தனியார் முதலீட்டாளர்களின் அனுபவத்தையும் நவீன தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட் டது.

அத்துடன் கடற்றொழில் சார் மக்க ளால் உருவாக்கப்பட்டு வருகின்ற கடலட்டை பண்ணைகளுக்கான கட லட்டை குஞ்சுகளின் தேவை அதிக ரித்துள்ள நிலையில்இந்தக் கலந் துரையாடல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடதக்கது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2022இல் வெளியிடப்பெற்றது.